பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 06 புதன்கிழமை 22.09.2021 கதிர் 321

### இது ரகசியம் அல்ல!

நேற்று இப்பத்தியில் என் கருத்து ஒன்றை விசனத்துடன் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தேன். 'தமிழரசு, தமிழ்க் கூட்டமைப்புத் தொடர்பில் பல விடயங்களைக் குறிப்பிடுகிறேன். அவற்றை ஏற்பதும், கவனத்தில் எடுப்பதும், எடுக்காமல் விடுவதும் பக்கம்02

# கொலையாளியே தான் செய்த கொலையை விசாரிப்பதுதான் இந்த உலகத்தின் நீதியா?



## ஐ.நா. செயலருக்குக் கோட்டா கூறிய உள்ளக விசாரணை ஒரு நீதியான பொறிமுறை அல்ல என்று சிறிதரன் பதிலடி

உள்ளக விசாரணை என்ற பெயரில் கொலையாளியே தான் செய்த கொலைகளை விசாரிப்பதுதான் இந்த உலகின் நீதியா? ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐ.நா. பொதுச்செயலாளருக்குக் கூறிய உள்ளக விசாரணை ஒரு நீதியான விசாரணை அல்ல.

– இவ்வாறு சபையில் நேற்று தெரிவித்தார் தமிழ்க் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன். ☞11

## இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற குற்றங்களுக்கு விடுதலைப்புலிகளே பொறுப்புக்கூற வேண்டும்

### இப்படிக் கூறுகின்றார் ராஜபக்ஷக்களின் சகா எஸ்.பி.



வன்னியில் இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் படுகொலைகளுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளே பொறுப்புக்கூற வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, கடந்த பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்குப் ☞11

## வீட்டுக் கதவை இறுக்கிப் பூட்டி வைத்துவிட்டு விருந்துக்கு அழைக்கும் ஜனாதிபதி கோட்டா

### ரெலோ பேச்சாளர் சுரேந்திரன் கருத்து



புலம்பெயர் அமைப்புகளுக்கு தடை விதித்து விட்டு முதலீடு செய்ய வரும்படி அழைப்பது வேடிக்கையாக இருக்கிறது என ரெலோ பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

'ஊடகப் பேச்சாளர் – ரெலோ, தமிழ் தேசியக் கூட்டமைப்பு' என்று குறிப்பிட்டு அவர் நேற்று அனுப்பி வைத்த ☞11

## நேற்று 1,351 பேருக்கே கொரோனாத் தொற்று

இலங்கையில் மேலும் 1,351 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப் பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 7 ஆயிரத்து 330 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட ☞11

## கிராமத்துக்கு 30 இலட்சம் ரூபா திட்டம்; வடக்கு மாகாணம் மட்டும் புறக்கணிப்பு

(ந.லோகதயாளன்)

இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும் கிராமத்துக்கு 30 இலட்சம் ரூபா திட்டம் வடக்கு மாகாணத்துக்கு மட்டும் நிறுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியால் நாடு பூராகவும் நடைமுறைப் படுத்தப்படும் மேற்படி திட்டம் தொடர்பில் செயலணியால் அண்மையில் சகல பிரதேச செயலாளர்களுக்கும் 14 பக்கங்களில் சுற்றுநிருபம் அனுப்பி வைக்கப்பட் டது. இதற்கான கலந்துரையாடலும் அண்மையில் சூம் வழியாக இடம்பெற்றது.

அவ்வாறு இடம்பெற்ற கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தின் 34 பிரதேச செயலாளர்கள் மட்டும் ☞11

## மேலும் சரிந்தது கொரோனா பலி


### நேற்றுமுன்தினம் 66 பேரே சாவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 66 பேர் நேற்றுமுன் தினம் பலியாகியுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த ☞11

## மன்னாரில் 104 கிலோ கேரள கஞ்சா விசேட அதிரடிப் படையினரால் மீட்பு

(ந.லோகதயாளன்)



மன்னார் மாவட்டம், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இலுப்பைக்கடவை – கத்தாளம்பிட்டி பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை கேரள கஞ்சா பொதிகளை நேற்று அதிகாலை விசேட அதிரடிப் படையினர் மீட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் அவர்கள் இலுப்பைக்கடவை – கத்தாளம் பிட்டி பகுதிக்குச் ☞11

## கிளிநொச்சியில் உயிரிழந்த 3 ஆண்களுக்குக் கொரோனா

கிளிநொச்சியில் உயிரிழந்த ஆண்கள் மூவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மூவரினதும் மாதிரிகள் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கே. கஜிதரன் (வயது 37), எஸ்.தம்பிராசா (வயது74) கே. கேசவன் (வயது 27) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

## சவேந்திர சில்வாவைத் தடைசெய்ய ஆதரவு வேண்டி பிரிட்டன் இளையோர் அறைகூவல்



(ந.லோகதயாளன்)

இலங்கையின் தற்போதைய இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவைத் தடை செய்ய ஆதரவு கோரி பிரிட்டன் இளையோர் காணொலி மூலம் அறைகூவல் விடுத்துள்ளனர்.

இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்ட போர்க்குற்றவாளிகளை ☞2

## விகிதாசார தேர்தல் முறையை மாற்றுவதை ஏற்கவே முடியாது

### தேர்தல் முறைமை தெரிவுக்குழுவுக்கு மனோ தலைமையில் த.மு.கூ. சாட்சியம்



இன்றைய நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, 20 ஆம் திருத்தத்தின் மூலம் மேலும் பலமாக்கப்பட்ட நிலையில், மாகாண சபை, நாடாளுமன்ற தேர்தல் முறைகளைகலப்பு முறைக்கு மாற்றி, சிறிய கட்சிகளின் பிரதிநிதித்துவங்களையும் ஒழித்து, மாகாண சபை, நாடாளுமன்ற மக்கள் மன்றங்களை மேலும் ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவரவர்களைப் பொறுத்தது' – என்று குறிப்பிட்டிருந்தேன்.

தமிழரசில் சம்பந்தன் – சுமந்திரன் நகர்வுக்கு நெற்றியடி கொடுக்க ரெலோ – புளொட் கூட்டு எப்படிக் காய் நகர்த்துகின்றது, எத்தகைய திட்டத்துக்கான வியூகங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்பவற்றையெல்லாம் நேற்று விலாவாரியாகக் குறிப்பிட்டிருந்தேன்.

நேற்று நாடாளுமன்றுக்கு வருகை தந்த சம்பந்தனுக்கு நேற்றைய என் பத்தியில் இருந்த விடயங்களை வரி விடாமல் வாசித்துக் காட்டியிருக்கின்றார் சுமந்திரன். சில வரிகலை திரும்பவும் வாசிக்கக் கேட்டுக் செவிமடுத்திருக்கின்றார் சம்பந்தன். அதன் பின்னர் ஆழமான யோசனையில் ஆழ்ந்தார் அவர்.

அவரின் நேற்றைய பிரதிபலிப்பை நான் இங்கு குறிப்பிடப்போவதில்லை. ஆனால் தேர்ந்த – பழுத்த – அரசியல்வாதியான அவருக்கு நான் கூற வந்த விடயம் நூற்றுக்கு இருநூறு வீதம் முழுமையாகப் புரிந்து விட்டது என்பதை மட்டும் என்னால் உறுதிப்படுத்த முடிந்தது. பதில் நடவடிக்கைகளைத் தமக்கேயுரிய தந்திரத்தில் அவர் முன்னெடுப்பார் என நினைக்கிறேன்.

உடனடியாகவே தமிழரசுக் கட்சியின் மற்ற ஐந்து எம்.பிக்களையும் கூட்டி அவர் உரையாடியிருக்கின்றார். எல்லோரும் மனம் விட்டுத் தங்களுக்குள் உரையாடியிருக்கின்றனர் என்று தெரிகின்றது. ஒன்றுபட்டு நிற்பதின் உறுதிப்பாட்டை சம்பந்தன் உட்பட அறுவருமே மாறி மாறி வற்புறுத்தினர். அடிமனதில் இருந்து வலியுறுத்தினர்.

தன்னுடன் தனித்து உரையாடுவதற்காக சிறிதரன் எம்.பியை நேற்று மாலை தனது இல்லத்துக்கு சம்பந்தன் அழைத்தார் என்றும் தகவல். சந்திப்பு நடந்ததா என்பதை அறிய முடியவில்லை.

தமிழரசுக் குழப்பத்துக்குத் தம் மீது நான் குற்றம் சுமத்தியிருக்கிறேன் என சிறிதரனுக்கு என் மீது வருத்தம். காய்ச்சல். அது தவிர்க்க முடியாததே.

தமிழரசின் தலைமைக்கு சிறிதரன் கண் வைப்பாராயின் அதை நான் தப்பு என்று கூறமாட்டேன். மூன்று தடவைகள் எம்.பியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டவர். இரண்டு தடவைகள் கட்சிக்குள் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றவர். அரசியல் தந்திரம் புரிந்தவர். தலைமைப் பதவியை அவர் எதிர்பார்ப்பது தப்பில்லை. அப்படி எதிர்பார்ப்பது அவரது நியாயமான உரிமையும் கூட. தமக்கென ஒரு பிரதேசத்தை – நிர்வாக மாவட்டத்தை – தன் வசீகரிப்பில் கட்டுப்படுத்தி வைத்திருப்பவர். ஜனரஞ்சகப் பேச்சாளர். நான் கட்சி உறுப்பினராக இருந்திருந்தால் சில சமயம் என் வாக்கு அவருக்காகக் கூட இருக்கலாம். அது அவரது கட்சியின் முடிவு. அதில் என் விருப்பு, வெறுப்புக்கு இடமேது?

நான் சொல்லும் குறைபாடு ஒன்றுதான். தமிழரசு நலிவு நிலைமை எதிர்நோக்கியிருக்கும் போது இந்தக் காய் நகர்த்தலை அவர் செய்திருக்கக் கூடாது என்பதுதான். பொறுப்பாக நடந்திருக்க வேண்டும். 'ஜெனிவா தொடர்பில் எங்களிடம் பல தெரிவுகள் இருந்தன, அவற்றில் ஒன்று தனித்து எங்கள் நிலைப்பாட்டைக் கடிதமாக அனுப்புவது, அதற்கும் தயார் செய்திருந்தோம், நிலைமைகளைப் புரிந்து கொண்டு அந்தத் திட்டத்தை கைவாங்கி விட்டோம்' என்று நேரத்துடன் அறிவித்திருந்தால் இந்நிலைமை வந்திருக்காது.

அத்துடன் சம்பந்தன் – சுமந்திரன் இணையைப் பலவீனப்படுத்துவதாக நினைத்துக் கொண்டு தமிழரசையே பலவீனப்படுத்த முயன்றமை தப்பு. அதுவும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் இணைந்து தமிழரசுக்கு ஆப்பு வைக்கும் – காய் நகர்த்தும் – சமயத்தில் சிற்றரசர்கள் ஒன்று சேர்ந்து தாங்களும் தமிழரசின் காலை வார முயற்சித்தமை தப்பு.

இந்தத் தப்பைச் சுட்டிக்காட்டியமைக்காக என் மீது அவர் கோபித்தால் நான் வேதனைப்படவோ பதில் கோபப்படவோ போவதில்லை.

என் எழுத்தினால் தமிழரசு எம்.பிக்களுக்குள் ஒற்றுமை வரும் சூழல்– ஐக்கியப்பட்டு இயங்கும் எண்ணம் – உருவாகியிருப்பது மகிழ்ச்சியே.

இந்த ஒற்றுமைத் தட்டில் இப்போது எம்.பியாகாமல் வெளியே நிற்கும் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவையும் மற்றும் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் டாக்டர் சத்தியலிங்கம், சி.வீ.கே. சிவஞானம் போன்றோரையும் ஏற்றிக் கொண்டு பயணிப்பதில்தான் சம்பந்தன் – சுமந்திரன் – ஸ்ரீதரன் குழுவின் வெற்றி தங்கியுள்ளது.

ரெலோவின் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் வழமையாக 'ரெலோவின் பேச்சாளர்' என்ற பதவி நிலையில் அறிக்கை விடுவார். அவரது நேற்றைய அறிக்கை 'ஊடகப் பேச்சாளர் – ரெலோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' என்ற அடிக்குறிப்புடன் வந்திருக்கின்றது. அதாவது தமிழ்க் கூட்டமைப்பு ரெலோவினுடையதும்தான் என்பதை வலியுறுத்திக் கோடி காட்டுகின்றாராம் அவர் தமது அறிக்கையில். தமிழரசுக்கு – குறிப்பாக கட்சித் தலைவர் மாவைக்கும் ஏனையோருக்கும் – அவர் சுட்டும் செய்தி புரிந்தால் சரி. புரியாவிட்டால் நான் ஒன்றும் செய்ய முடியாது.

ரெலோவின் சம்மதத்துடன் கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட சதீஸ் என்பவரைத் தம்பாட்டில் இன்று நடைபெறும் வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் தெரிவின்போது வேட்பாளராக நிறுத்துவதற்கு ரெலோத் தலைமை ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகின்றது. நேற்றிரவு வரை இது தொடர்பில் தமிழரசுக்கு உத்தியோகபூர்வமாக இவ்விடயம் தெரிவிக்கப்படவில்லை என்று தெரிகின்றது. புதிதாகத் தாங்கள் கூட்டு அமைத்திருக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஸ்ரீகாந்தா – சிவாஜி அணியின் ஆதரவுடன் இந்தப் பதவியை வெல்லலாம் என்று ரெலோ அணி கணக்கிட்டிருப்பதாகத் தகவல். ஆனால் கடைசியாக நல்லூர் பிரதேச சபையில் நடந்ததுதான் ரெலோவுக்கு வல்வெட்டித்துறையிலும் நடக்கப்போகின்றது என்று நினைக்கிறேன்.

இன்றைய தேர்தலில் பிரபல கணக்காளரும் சுயேச்சைக்குழு இலக்கம் 4 இன் பிரதிநிதியுமான செல்வேந்திரா கூட்டமைப்பின் உறுப்பினர்கள் ஒரு சிலரின் ஆதரவுடன் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பிருப்பதாகத் தெரிகின்றது.

இன்று பகல் முடிவு வந்து விடும்.

நேற்று நாடாளுமன்றம் வந்த சம்பந்தன், கூட்டமைப்பின் ஏனைய ஒன்பது எம்.பிக்களையும் சந்திப்புக்கு அழைத்தார். முதலில் சம்மதம் கூறிய ரெலோ, புளொட் தலைவர்கள் பின்னர் பின்வாங்கினர். செல்வம் அவசரமாக வெளியே செல்ல வேண்டியிருப்பதால் இன்று சந்திக்கலாம் என்று சந்திப்பைத் தள்ளிப் போட்டனர்.

சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா? காரணத்துடன்தான் இந்த ஒத்தி வைப்பும். நேற்றுக் கூட்டம் நடந்தால் அதில் இன்று நடைபெறவிருக்கும் வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் தெரிவு பற்றிய விவகாரம் வரும். நகர சபை யின் உப தவிசாளருக்குக் கை நீட்டி அடித்து, சுமந்திரனுக்கு எதிராகக் கொடும்பாவி எரித்து, பல அட்டகாசங்கள் பண்ணியமைக்காக, ரெலோவின் சம்மதத்துடன் கூட்டமைப்பிலிருந்து உத்தியோகபூர்வமாக வெளியேற்றப்பட்டவரைத் தாங்கள் இப்போது தலைவர் பதவிக்கு நிறுத்துவது குறித்து, சுமந்திரன், ஸ்ரீதரன் போன்றோர் கேள்வி எழுப்புவர், சிக்கல் வரும் என்று ரெலோவினர் எதிர்பார்த்தனர். தங்களின் புதுக் கூட்டில் உள்ள சுரேஷ் பிறேமச்சந்திரன் மற்றும் ஸ்ரீகாந்தா – சிவாஜிலிங்கம் அணியின் ஆதரவுடன் அந்தச் சிக்கல் பிரமுகரை வேட்பாளராக நிறுத்தித் தலைவராக்கும் தமது முயற்சி நெருக்கடிகுள்ளாகும் என்பதைப் புரிந்து கொண்ட ரெலோ ஏதோ காரணத்தைக் கூறி நேற்றைய கூட்டத்தைத் தள்ளி வைக்கச் செய்து விட்டது.

இன்று கூட்டம் கூடும்போது ரெலோ, புளொட் தலைவர்கள் வருவரோ தெரியவில்லை. வந்தாலும் மதியம் இக் கூட்டம் கூடும்போது வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் தெரிவு முடிவடைந்திருக்கும்.

கூட்டமைப்பு இன்னும் கொஞ்சக் காலத்துக்கேனும் கூட்டமைப்பாகத் தொடருமா அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாங்கள்தான் என்று உரிமை கோருவதற்கான இழுபறி இப்போதே ஆரம்பமாகுமா என்பதை கூட்டமைப்பின் இன்றைய நாடாளுமன்றக் கூட்டத்துக்குப் பின்னர் ஓரளவு உறுதி செய்யக் கூடியதாக இருக்கும் என்று நம்பலாம்.

– மின்னல்–

## விகிதாசார தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பலவீனமாக்கி நாட்டை சர்வதிகார போக்கில் மென்மேலும் கொண்டு செல்ல ஒரு போதும் இணங்கவோ, இடமளிக்கவோ முடியாது. இந்த வரலாற்று தவறு உங்கள் தலைமையில் ஏற்பட்டது என்ற பழிச் சொல் உங்கள் மீது விழாமல் தவிசாளர் அமைச்சர் தினேஷ் குணவர்தன கவனமாகச் செயற்பட வேண்டும்.

– இவ்வாறு தேர்தல் முறைமை சீர்திருத்த தெரிவுக்குழுவில் சாட்சியம் அளித்த தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

தேர்தல் முறைமை சீர்திருத்த தெரிவுக் குழு நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று தவிசாளர் அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் கூடியபோது, த.மு.கூ. தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர் வி. இராதாகிருஷ்ணன், எம்.பிக்களான வேலு குமார், உதயகுமார் ஆகியோர் அடங்கிய கூட்டணி தூதுக்குழுவினர் சமுகமளித்தனர். அதன்போது கூட்டணியின் நிலைப்பாடுகளை எடுத்துக்கூறிய மனோ கணேசன் எம்பி மேலும் கூறியதாவது:–

நீண்டகாலமாக பேசப்பட்டு வந்த தேர்தல் முறை மாற்றம் எமது ஆட்சிகாலத்தில் கலப்பு முறைக்கு பரீட்சார்த்தமாக மாற்றப்பட்டது. ஆனால், அந்த மாற்றம் உள்ளூராட்சி மன்றங்களில் நிலையான ஆட்சிக்கு வழி காட்டவில்லை. அத்துடன் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை நாடெங்கும் ஏறக்குறைய அறுபது முதல் எழுபது விகிதம் அதிகரித்தது. ஆனாலும், குழப்ப நிலைமையே ஏற்பட்டது.

இந்நிலையில், இதே விதமான குழப்ப நிலைமையை மாகாண சபை, நாடாளு மன்றங்களிலும் ஏற்படுத்தி இந்நாட்டின் ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்க வேண்டாம். எமக்கு முன் சாட்சியம் அளித்த ஒரு இன்னொரு கட்சியின் பிரதிநிதி, சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவங்களை வெட்டி குறைத்தால், அவர்கள் கடந்த காலங்களை போல் வேறு வழி இல்லாமல், ஆயுதம் தூக்கும் நிலைமைக்கு தள்ளப்படுவார்கள் என்றார்.

அது உண்மை. ஆனால், அந்த நிலைமை வடக்கில் மட்டுமல்ல. தெற்கிலும் ஏற்பட்டது என்பதை நான் இந்த குழுவுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாடாளுமன் றத்தில் நியாயமான பிரதிநிதித்துவங்களை பெற முடியாத நிலையில், தென்னிலங்கையிலும் சிங்கள இளையோர் இப்படி ஆயுதம் தூக்கினார்கள். இன்று விகிதாசார முறையின் கீழ்தான் இந்நிலைமை மாறியது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை அறிமுகம் செய்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனதான், உள்ளூராட்சி, மாகாணசபை, நாடாளுமன்றங்களுக்கு விகிதாசார தேர்தல் முறைமையையும் கொண்டு வந்து அறிமுகம் செய்தார். ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் சில பிழையான செய்கைகளுக்கு மத்தியில் அவரது தீர்க்கதரிசனமிக்க சரியான செய்கை இதுவாகும்.

இன்று நீங்கள் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இன்னமும் பலமிக்கதாக 20ஆம் திருத்தத்தின் மூலம் மாற்றியுள்ளீர்கள். இது உண்மை. எனவே ஒரு சிலரின் தேவைகளுக்காக, விகிதாசார தேர்தல் முறைமையை மாற்றி நாட்டை சர்வதிகார படுகுழியில் தள்ள வேண்டாம்.

இலங்கையின் அனைத்து இன மற்றும் சமூக குழுவினர்களும் பிரதிநிதித்துவம் செய்ய இடந்தரும் வண்ணமும், பெரிய, சிறிய கட்சிகள் தாம் பெறுகின்ற வாக்கு தொகைகளுக்கு ஏற்ப பிரதிநிதித்துவங்கள் பெரும் வண்ணமும், உள்ளூராட்சி, மாகாணசபை, நாடாளுமன்ற தேர்தல்கள் முழுமையான விகிதாசார முறைமையின்படியே நடத்தப்பட வேண்டும். இதன்மூலம் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை கண்காணித்து சமநிலைப்படுத்தும் நிறுவனங்களாக ஜனநாயகத்தின் பேரில் நாடாளுமன்றமும், மாகாண சபைகளும் செயற்பட முடியும். இதுவே தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிலைப்பாடு – என்றார்.

## சவேந்திர சில்வா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரிட்டனின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான தடை விதிப்பு அதிகார சபையின் கீழ் தடை செய்வதற்கு பிரிட்டன் அரசு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அனைத்து தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள், அனைத்து மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களின் ஆதரவு கோரி இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்த தமிழ் இளையோர் காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார்கள்.

அக்காணொலியில் தமிழ் இளையோர் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் சவேந்திர சில்வாவைத் தடைசெய்யும் முயற்சிக்கு சர்வதேச ஆதரவை திரட்டும் நோக்கில் இணைய வழி கையெழுத்துப் போராட்டம் ஒன்றைத் தாங்கள் ஆரம்பித்தமையையும் மற்றும் இறுதி யுத்தத்தின் 12ஆம் ஆண்டு நினைவு தினமான 2021 மே 18 அன்று பிரிட்டன் நாடாளுமன்றில் ஸ்கொட்லாந்து தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மக்லோக்லின் ஆனாலினால் முன்மொழியப்பட்டு முன்பிரேரணை கொண்டு வரப்பட்டமையையும், இடம்பெற்றுள்ளது அதே நேரம் அனைத்து பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தொடர்பு கொண்டு தொடர் சந்திப்புக்களை மேற் கொண்டு வருகின்றனர்.

இதுவரை இந்தப் பிரேரணைக்கு 29 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கையெழுத்தும் பெறப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.



# பிரதமர், ஜனாதிபதியைச் சந்திக்க விமல், வாசு உள்ளிட்டோர் திட்டம்



முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண மற்றும் அமைச்சர்கள் தயாசிறி ஜெயசேகர, வாசுதேவ நாணயக்கார மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோர் ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி தலைமையகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற சந்திப்பில் இந்த முடிவு எட்டப்பட்டதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தின்போது கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்கான ஒப்பந்தம் தொடர்பாகப் பேசப்பட்டுள்ளது.

இந்நிலையில் கட்சித் தலைவர்கள் என்ற முறையில் ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்திக்க திட்டமிட்டுள்ளதாகவும் இறுதி முடிவு எடுப்பதற்கு முன்பு இந்த விடயத்தில் தங்களின் நிலைப்பாட்டை தெரிவிக்கவுள்ளனர் எனவும் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இதேவேளை ஏற்கெனவே ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளமையால் விவாதங்கள் பயனற்றனவா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், நாட்டைப் பற்றி எடுக்கப்படும் முடிவுகள் விரைவில் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் அவநம்பிக்கையுடன் இருக்கக்கூடாது என்றும் கூறினார்.

இதற்கிடையில் கடந்த காலங்களில் கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், கிழக்கு கொள்கலன் முனையம் குறித்து பங்காளிக்கட்சிகள் முடிவு செய்தமையைப் போலவே ஓர் உடன்படிக்கைக்கு வரத் திட்டமிட்டுள்ளதாக அமைச் சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இதேவேளை இந்த விடயத்தில் அரசாங்கத்துடன் விவாதித்து இணக்கமான முடிவுக்கு வருவது தொடர்பாக பேராசிரியர் திஸ்ஸ விதாரண கருத்து தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## 20 வயதுக்கு மேற்பட்டோருக்கு மட்டக்களப்பில் தடுப்பூசி ஏற்றல்

மட்டக்களப்பு - களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள், நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை முதல் முன்னெடுக்கப்பட்டன.

களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.இராஜேந்திராவின் தலைமையில், பெரியகல்லாறு, செட்டிபாளையம் ஆகிய பகுதிகளில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் பெரியகல்லாறிலுள்ள அருளானந்தர் வித்தியாலயம், உதயபுரம் தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றில் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

இதில், பெருமளவான இளைஞர் மற்றும் யுவதிகள் ஆர்வத்துடன் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் காத்திருந்தமையைக் காணமுடிந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசிகள் வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பலில் எரிபொருள் இருக்கலாம்

பல்வேறு உத்தரவாதங்களுக்கு மத்தியில், கொழும்பு கடலில் மூழ்கிய எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பலில் இன்னும் எரிபொருள் இருக்கக்கூடும் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவரான தர்ஷினி லஹந்தபுர, கப்பலில் பதுங்கு எரிபொருள் எஞ்சியிருக்கவில்லை என்று வெளிநாட்டு நிபுணர்கள் நம்புகின்றனர் எனக் கொழும்பின் ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

எனினும் கப்பலில் எரிபொருள் எஞ்சியிருக்கவில்லை என்பது 100 சதவிகிதம் உறுதி செய்யப்பட்டால் மட்டுமே, கப்பலின் உரிமையாளர்கள், இடிபாடுகளை அகற்ற முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுழியோடிகள் சென்று, கப்பலைப் பரிசோதனை செய்து அதில் எரிபொருள் இல்லை என்று உறுதி அளிக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

கப்பலில் எரிபொருள் எஞ்சியிருந்தால், சிதைவுகளை அகற்றுவதற்கு முன் அதை வேறு கொள்கலனுக்கு மாற்ற வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சாத்தியமான எரிபொருள் கசிவைக் கண்டறிய ட்ரோன்கள் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் சிதைவுகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன என்று லஹந்தபுர தெரிவித்துள்ளார்.

மூழ்கிய கப்பலின் சிதைவுகளை விரைவில் அகற்றவேண்டும். இந்த மூழ்கிய கொள்கலன்களின் காரணமாகக் கடலோர மீன்பிடித்தல் இன்னும் தடை செய்யப்பட்டுள்ளது, என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பல் கடந்த மே மாதம் கொழும்பு கடலில் தீப்பற்றி பின்னர் மூழ்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகளாவிய தரவரிசையில் முதல் 10 இற்குள் இடம்பிடித்துள்ள மெணிகே மகே ஹிதே பாடல்

யோஹானி மற்றும் சதீனின் 'மெணிகே மகே ஹிதே' பாடல், உலகளாவிய தரவரிசையில் முதல் 10 இடங்களில் இடம் பிடித்துள்ளது.

இந்த வாரம் யூடியூப் உலக தரவரிசையில் இலங்கையின் இந்தப் பாடல் 7 ஆவது இடத்தில் உள்ளது. கடந்த வாரம், இந்த பாடல் 6 ஆவது இடத்திலிருந்தது. யொஹானி மற்றும் சதீனின் 'மெணிகே மகே ஹிதே' பாடலை யூடியூபில் 11.6 கோடி பார்வைகள் பார்த்துள்ளனர்.

அமிதாப் பச்சன், ஹிந்தி பதிப்பில் நடனமாடும் காணொலியைப் பகிர்ந்த பிறகு இந்த பாடல் இந்தியாவின் கவனத்தை ஈர்த்தது. தனது பேத்தி நவ்யா நவேலி நந்தா தனது திரைப்படமான காலியாவின் நடன வரிசையைத் திருத்தியதாகவும், அசல் பாடலான 'ஜஹான் தெறி யே நாசர் ஹை' காணொலியில் அதனை 'மெணிகே மகே ஹிதே' என்று மாற்றியதாகவும், அமிதாப் பச்சன் கூறியுள்ளார்.

பின்னர் டைகர் ரொஃப், மாதுரி தீட்சித், பரிணீதி சோப்ரா, இசைக்கலைஞர் சோனு நிகம் மற்றும் இந்திய இசை தயாரிப்பாளர், இசையமைப்பாளர் மற்றும் சமூக ஊடக ஆளுமை யஷ்ராஜ் முகதே ஆகியோர் 'மெணிகே மகே ஹிதே' பாடலுக்கு நடனமாடினர்.

கூடுதலாக, ஓர் இண்டிகோ விமானப் பணிப்பெண் ஒரு வைரல் காணொலியில் நடனமாடினார்.

அதேநேரம் உலகெங்கிலும் உள்ள பல்வேறு மொழிகளில் இந்தப் பாடலின் பல அட்டைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## அத்தியாவசியப் பொருள்களின் விலையை பரிசீலிக்கும் நடவடிக்கையில் அரசாங்கம்

அரிசி, சீனி, பால் மா மற்றும் உள்நாட்டு எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலையை நிர்ணயிக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

தற்போது, அரிசி மற்றும் சீனிக்கு அதிகபட்ச சில்லறை விலை விதிக்கப்பட்டுள்ள நிலையில் ஒருசில அத்தியாவசியப் பொருள்களின் விலை தொடர்பாக பரிசீலனை இடம்பெற்று வருகின்றது.

இருப்பினும் இறுதி முடிவு இதுவரை எடுக்கப்படவில்லை என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

இறக்குமதிகளுக்கு நிதியளிப்பதற்கு டொலர் பற்றாக்குறை மற்றும் ரூபாவின் வீழ்ச்சி போன்ற காரணங்களால் நாட்டில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை சீனி மீதான இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்படுமா என்ற கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், கிடைக்கப்பெற்ற கையிருப்பு இரண்டரை மாதங்களுக்கு போதுமானது எனக் கூறினார்.

ஒரு கிலோ அரிசிக்கு அதிகபட்ச விலையாக 98 ரூபாவை அரசாங்கம் நிர்ணயித்துள்ளது போதும், விவசாயிகள் தங்களின் நெல் விளைபொருள்களின் விலையை உயர்த்தக் கோரி தற்போது போராட்டம் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்துவதற்கு காலக்கெடு

அரசு விடுப்பு

30 வயதிற்கு மேற்பட்டவர்கள் இந்த வாரத்திற்குள் தடுப்பூசியை செலுத்திக்கொள்ள வேண்டும் என அரசாங்கம் காலக்கெடுவை அறிவித்துள்ளது.

குறித்த வயதுடையவர்களுக்காக தொடர்ந்தும் தடுப்பூசி நிலையங்களை இயக்க முடியாது என்பதன் காரணமாக காலக்கெடுவை வழங்க வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

30 வயதுக்கு மேற்பட்ட பலர் தடுப்பூசி பெற்றிருந்தாலும், ஒருசிலர் பல்வேறு காரணங்களால் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள மறுப்பு தெரிவிக்கின்றனர் எனக் கூறினார்.

குறித்த வயதுடையவர்களுக்காகத் தொடர்ந்தும் தடுப்பூசி நிலையங்களை நிர்வகிக்க முடியாது என்றும் நாட்டின் இளைஞர்கள் மற்றும் சிறுவர்களுக்குத் தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டை விரைவாக முன்னெடுக்க வேண்டும் என்றும் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை கடந்த வாரம் நிறைவடைய விருப்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர் அதற்காக மேலும் ஒரு வாரம் நீடிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## புலம்பெயர் மக்களின் உரிமை

இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரெஸுக்கும் இடையில் நியூயோர்க்கில் நடைபெற்ற சந்திப்புத் தொடர்பில் ரெலோ கட்சியின் சார்பில் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற உரிமையோடு – ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமி முன்வைத்திருக்கும் கருத்தில் ஒரு விடயம் கவனிக்கப்பட வேண்டியதாகியுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது புலம்பெயர் சமூகத்தை முதலீடு செய்வதற்கு இலங்கைக்கு வருமாறு ஜனாதிபதி அழைத்துள்ளார் என்ற சாரப்பட சுரேந்திரன் கருத்து வெளியிட்டுள்ளார்.

மேற்படி சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் விடுத்த செய்திக் குறிப்பு மிகத்தெளிவானது. நேற்று அதனை இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

“இலங்கையின் உள்ளகப் பிரச்சினைகள், நாட்டுக்குள்ளேயே தீர்க்கப்பட வேண்டும். அதற்காக புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுக்கின்றார் என ஜனாதிபதி தெரிவித்தார்.” – என்றுதான் அதில் கூறப்பட்டுள்ளது.

நாட்டின் உள்ளகப் பிரச்சினை குறித்து, புலம்பெயர் சமூகத்துடன் பேசித் தீர்வு காண ஜனாதிபதி விரும்புகின்றார் என்ற கருத்தைத்தான் ஜனாதிபதி செயலக செய்திக் குறிப்பு கூறுகின்றது. அதில் ஜனாதிபதி உண்மையாக இருக்கின்றாரா, நேர்மையாக நடப்பாரா என் ற விடயங்கள் எல்லாம் வேறு.

ஆனால், ஜனாதிபதி செயலகமே புலம்பெயர் மக்களு டன் உள்ளகப் பிரச்சினைகள் குறித்து நாட்டுக்குள்ளேயே தீர்வு காண்பது பற்றிப் பேச வாருங்கள் என ஜனாதிபதி அழைத்துள்ளார் என்று கூறும்போது, நாட்டில் முதலீடு செய்ய வாருங்கள் என்றுதான் புலம்பெயர் சமூகத்தை ஜனாதிபதி அழைத்தார் என்ற மாதிரி ஒரு திரிவை ரெலோ தரப்பு ஏன் வலிந்து திணிக்கின்றது என்பது புரியவில்லை.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது தொடர்பான விடயத்தில் தாங்கள் பிரதான பங்குரிமையாளர்கள் (Stake holders) என்று கருதும் நமது உள் நாட்டுத் தமிழ் அரசியல் தலைவர்கள் ஒரு விடயத்தை மறந்துவிடக் கூடாது.

நீங்கள் நாடாளுமன்றத்துக்குப் போகப் பெற்ற வாக்குகள் மொத்தமாக ஒரு சில லட்சங்கள்தான். ஆனால் இலங்கை இனப்பிரச்சினையால் பூமிப்பந்தெங்கனும் வேரோடும் வேடி மண்ணோடும் தூக்கி வீசப்பட்டு சிதறி வாழும் நம் புலம்பெயர் சமூகத்தவர்கள் பத்து லட்சம் பேருக்கு மேல் உள்ளனர்.

தமது தயகத்துக்குத் திரும்பவும் (Right to return), இனப்பிரச்சினைத் தீர்வில் நேரடியாகப் பங்களிக்கவும் இங்கு நாட்டில் இருக்கும் நம் ஒவ்வொருவருக்கும் உள்ள உரிமைபோல அவர்களுக்கும் சமபங்கு உரிமையுண்டு. சர்வதேசச் சட்டங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட அவர்களின் அடிப்படை உரிமை அது.

அந்த உரிமையைப் புரிந்து கொண்டுதான் என்னவோ அவர்களுக்கும் தீர்வு காண்பது குறித்துப் பேசுவ தற்கான அழைப்பை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்தாரோ என்னவோ?

தலைவர் பிரபாகரன் கடைசி மாவீரர் தின உரை 2008 நவம்பர் 27இல் நடந்தது. அதை ஆழமாக வாசித்தால் வரிகளுக்கு இடையில் ஒரு விடயம் பொதிந்திருப்பதை நாங்கள் அவதானிக்க முடியும். இந்த விடுதலைப் போராட்டத்தை புலம்பெயர் இளைஞர் சமூகத்திடம் அவர் கையளிக்கின்றார் என்பதுதான் அது.

ஆகவே நமது இனத்தின் விடுதலைப் போராட்டத்துக்கான நிதிக்காகத் தங்களையே உருக்கிப் பங்களித்த அவர்களை – புலம் பெயர்ந்துள்ள நமது இரத்தங்களை – நமது தாயகத்தில் முதலீடு செய்யும் வெறும் முதலீட்டாளர்களாகப் பார்க்காமல், அதையும் தாண்டி, இனப்பிரச்சினைத் தீர்வில் அழுத்தங்கள் ஏதுமின்றி, சுயாதீனமாகத் தீர்மானம் எடுக்கக் கூடிய தகைமையிலும், உரிமையிலும் உள்ள பிரதான பங்காளர்களாகப் பாருங்கள். அதுதான் நியாயம்.

## சட்டம் மற்றும் ஒழுங்கு குறித்து யாழ்ப்பாணத்தில் மக்கள் அச்சம்

### சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணத்தில் சட்டம் ஒழுங்கு குறித்து மக்கள் அச்சம் கொள்ளக் கூடிய ஒரு சூழல் தொடர்வதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் சுரேஷ் பிறேமச்சந்திரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அதாவது ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று இடங்களில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு, சிறைக்குள் அனுப்பப்படுகின்றார்கள். ஆனால் மிகவும் விரைவாக விடுதலை பெற்று வெளியே வருகின்றனர்.

அவ்வாறு வருகை தருகின்றவர்கள் மீண்டும் அதனையே செய்கின்றனர். மேலும் அவர்களுக்கு சில அதிகாரிகள் துணையாக இருக்கின்றமையாலேயே வன்முறை செயற்பாடுகளைத் துணிவாகச் செய்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே வடக்கு மாகாணத்தில் கடமையாற்றுகின்ற பொலிஸ் அதிகாரிகள் சட்ட ஒழுங்கை காப்பாற்றுவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

அப்போதுதான் மக்கள் அச்சமின்றி வாழக் கூடிய சூழ்நிலை ஏற்படும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வெலிக்கடைச் சிறைச்சாலைக் கைதிகளின் விடுதலை கோரிய போராட்டம் தொடர்கிறது



வெலிக்கடை சிறைச்சாலையில் கைதிகள் சிலர் ஆரம்பித்த போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, இதுவரை சுமார் 10 கைதிகள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தமது தண்டனையைக் குறைக்குமாறு கோரி சிறைச்சாலை கூரை மீதேறி கைதிகள் கடந்த திங்கள் முதல் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபடுகின்றனர் எனசிறைச்சாலைகள் திணைக்களம் கூறியுள்ளது.

எவ்வாறாயினும் கைதிகளின் கோரிக்கைக்கு சாதகமான தீர்வை வழங்க தமது திணைக் களத்துக்கு இயலாதென அந்தத் திணைக் களம் தெரிவித்துள்ளது.

## உயர்தர மாணவர்களின் பாடத்திட்டம் நிறைவு செய்யப்படாமை குறித்து கவனம்

### தினேஷ் குணவர்தன தெரிவிப்பு



இந்த ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான பாடத்திட்டத்தை நிறைவு செய்ய முடியாமல் போனமை தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் பாடத்திட்டத்தை விரைவாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்

இதற்கு பதிலளித்த அமைச்சர் குணவர்தன –

இந்த விடயம் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துடன் பல கட்டப் பேச்சு நடத்தப்பட்டுள்ளதாகக் கூறினார்.

அத்தோடு பாடத்திட்டத்தை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும், ஆசிரியர்களின் வேலைநிறுத்த நடவடிக்கைகளுக்கு மத்தியில் தீர்வு வழங்க அதிகாரிகளுடன் கலந்துரையாடப்படும் என்றும் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

## 3 ஆவது தடுப்பூசியாக பைஸர் வழங்க முடிவு!

*கொழும்பு, செப். 22*

*இலங்கை மக்களுக்கான மூன்றாவது தடுப்பூசிகள் முற்பதிவு செய்யப்பட்டுள்ளன என அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.*

*அதற்கமைய, 1.4 கோடி பைஸர் தடுப்பூசிகளை முற்பதிவு செய்துள்ளதாக அந்த கூட்டுத்தாபனத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.*

*அதனடிப்படையில் எதிர்வரும் ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் அல்லது நவம்பர் மாத ஆரம்பத்திலிருந்து நாட்டு மக்களுக்கு மூன்றாவது தடுப்பூசி வழங்கப்படும் என அவர் கூறியுள்ளார்.*

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

## அங்கம் - 83

ந.வித்தியாதரன்

கடந்த நூற்றாண்டில் மூன்று தலைமுறைகளாகக் கட்டவிழ்ந்த அச்சு முறைமைகளையும் ஒழுங்கு முறையில், நேரடி அனுபவ அறிவாகக் கற்றுத் தேர்ந்தவர் சிவநாயகம் ஐயா.

அவரின் கீழ் 'தினபதி', 'சிந்தாமணி'யில் பத்தொன்பது வயது இளைஞனாக நான் இணைந்தபோது பத்திரிகைகள் இரண்டாம் தலைமுறை அச்சு முறைமையில் இருந்தன. லைனோ முறையில் அச்சுக் கோர்த்தல், அதன் மூலம் தயாரிக்கப்படும் ஈயத் தகட்டுப் பிளேட்களை இயந்திரத்தில் பொருத்தி அச்சிடும் ரோட்டரி அச்சு முறைமை ஆகியன புழக்கத்தில் இருந்தன.



பத்திரிகை உலகில் எனக்குக் கிட்டிய முதல் அனுபவம் அதுதான்.

கொழும்புப் பத்திரிகை அலுவலகங்களில் வழக்கமாக ஆசிரியர் பீட அலுவலருக்கோ, பணியாளருக்கோ Works Department இல் அதிகமான தொடர்பு, ஊடாட்டம் இருப்பதில்லை. கொழும்புப் பத்திரிகைகளில் மாறி உள்ளே நுழைவதற்குக் கூட அனுமதி இருக்காது.

ஆனால் தினபதி, சிந்தாமணியில் என் நிலைமை வேறு. நான் சின்ன பையன். சிங்கள மெஷின் மைண்டர்கள் கூட 'பொடி புத்தா' என்று என்னை வாஞ்சையுடன் அந்நேரத்தில் அழைப்பர். சிங்களம் புரியாமல் நான் அவ்வப்போது வழங்கும் பதில்கள் அவர்களுக்கு அசட்டுப் பிசட்டுத்தனமாக இருப்பதுண்டு. இதனால் அங்கு லைனோ அச்சுக் கோர்த்தல் மற்றும் அச்சக பிரிவுகளுக்குள் நான் அவ்வப்போது கேட்டுக் கேள்வியின்றி நுழைந்து வருவேன். சில சமயங்களில் பாது காவலர்கள், மேற்பார்வையாளர்கள் முறைப்பதுண்டு. பல சமயங்களில் மேற்பார்வையாளர்கள் தாமாகவே வந்து சிங்களத்தில் இயந்திரங்கள், இயக்கங்கள் பற்றி விளக்கம் தருவதும் உண்டு. எனக்குப் புரிந்த சிங்களத்தில் நான் அவற்றை விளங்கிக் கொள்வேன்.

எனது இளம் வயதோ அல்லது இயல்பாகவே இந்தத் துறையில் எனக்கு இருந்த நாட்டமோ நான் தினபதி அலுவலகத்தை என் வேலைத் தளமாகப் பார்க்கவில்லை. மாறாக, குருகுலமாகவே - பயிற்சித் தளமாகவே - பார்த்தேன். வருமானம், சம்பளம், எனது மரியாதை, கௌரவம் என்றெல்லாம் அங்கு நான் நோக்கியவனல்லன்.

பத்திரிகைத் துறையின் பிரம்மாண்டத்தை நான் தினபதியில்தான் முதன் முதலில் கண்டேன். அந்த கட்டமைப்பு என் மனதில் நிரந்தரமாகப் பதிந்து கொண்டது.

எவ்வாறு ஊடகத்துறையின் அடிப்படைக் கோட்பாடுகள், விழுமியங்கள், நெறிமுறைகள் போன்றவற்றை எஸ்.டி. சிவநாயகம் ஐயா தலைமையிலான தினபதி ஆசிரியர் குழுமத்திடம் நான் பெற்றுக் கொண்டேனோ, அதேபோல கணிசமான அறிவை அந்நிறுவனத்தின் வேலை மற்றும் அச்சகப் பகுதியிலிருந்தும் நானே கிரகித்துக் கொண்டேன்.

அதுதான் இந்த லைனோ அச்சுக் கோர்த்தல், ரோட்டரி அச்சு இயந்திரங்கள் பற்றிய - கடந்த நூற்றாண்டின் இரண்டாம் தலைமுறை அச்சியந்திரங்கள் பற்றிய - எனது பட்டறிவு.

தினபதியிலிருந்தும், கொழும்பிலிருந்தும் 1983 ஆடிக் கலவரத்தை அடுத்து வெளியேறி யாழ்ப்பாணம் வந்து, 1985 இல் உதயனை ஆரம்பித்தபோது, தினபதியில் நான் பார்த்த அச்சு முறைமை யாழ்ப்பாணத்துக்கு எட்டாக்கனியாக இருந்தது.

மேற்குலகில் ஓவ் செட் அச்சு முறைமை வந்த காலம். கொழும்பில் தினபதி பத்திரிகை கூட அதை எட்ட முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தது. கணினியில் செய்தியை வடிவமைக்கும் முறைமையை சுவீகரிக்க முடியாமல் லைனோ மெஷினில் அது அச்சுக் கோர்த்துக் கொண்டிருந்தது.

நாங்களோ யாழ்ப்பாணத்தில் அதற்கு முந்திய கையால் அச்சுக் கோர்க்கும் முதல் தலைமுறை அச்சு முறைமையில் - பழைய வடிவத்தில் - பத்திரிகையை அடித்துக் கொண்டிருந்தோம். சுமார் 12 - 13 ஆண்டுகள் அப்படித்தான் உதயன், சஞ்சீவி வெளிவந்தன. புதிய மிலேனியத்தை நெருங்கும் சமயத்தில்தான் நாம் ஓவ் செட் அச்சு முறைமைக்கு மெல்ல மாறினோம் - இடையிலிருந்த இரண்டாம் தலைமுறை அச்சு முறைமைக்கு மாறாமலேயே.

எனினும் இதற்கிடையில் 1988 ஜனவரியில் தமிழகம் சென்ற நான் அங்கு ஆனந்த விகடன், ஜூனியர் விகடன் அலுவலகப் பயிற்சி மூலம் ஓவ் செட் அச்சு முறைமை, அதைப் பத்திரிகைத் துறையில் பயன்படுத்துதல் போன்றவை தொடர்பில் ஒரு முழுமையான தொழில்நுட்ப அறிவோடு திரும்பினேன்.

சிவநாயகம் ஐயா வரிசையாக முதலாம், இரண்டாம், மூன்றாம் தலைமுறை அச்சக முறைமையில் தேர்ந்து வந்தார்.

நானோ முதலில் தினபதியில் இரண்டாம் தலைமுறை, பின்னர் உதயனில் முதலாம் தலைமுறை, பிறகு அங்கேயே மூன்றாம் தலைமுறை ஓவ் செட் முறைமையில் அதிகம் பரிச்சயம் பெற்றேன்.

இன்னொரு விடயமும் இதில் உண்டு. மேற்குலகின் நவீனத்துவத்தை விரைந்து சுவீகரித்துக் கொள்ளும் கொழும்பு, அதேபோல இரண்டாம் தலைமுறை அச்சு முறைமையான லைனோ அச்சுக் கோர்த்தல், ரோட்டரி முறையில் அச்சிடல் என்ற முறைமைகளை உடனேயே உள்வாங்கியது. அதன் பின்பே சுமார் இரண்டு தசாப்த காலம் கழித்துத்தான் மூன்றாம் தலைமுறையான ஓவ் செட் அச்சு முறைமைக்கு அது நுழைந்தது.

ஆனால் யுத்தம் மற்றும் ஏனைய பின்னடைவு நிலைமைகள் காரணமாக யாழ்ப்பாணம் அன்று இரண்டாம் தலைமுறை அச்சக முறைமையை உள்வாங்கவே இல்லை. லைனோ அச்சுக் கோர்த்தல் மற்றும் ரோட்டரி மெஷின்களில் அச்சிடல் முறைகளை யாழ்ப்பாணம் காணவில்லை. நேரடியாக கையால் அச்சுக் கோர்த்து அச்சிடும் முதலாம் தலைமுறையிலிருந்து ஓவ் செட் அச்சுமுறைக்கு - மூன்றாம் தலைமுறை அச்சு முறைமைக்கு - அது பாய்ந்தது.

இதன்காரணமாக யாழ்ப்பாண ஊடகம் மற்றும் அச்சகத் துறையினருக்கு அச்சுத்துறையில் இடையில் வந்த இந்த இரண்டாம் தலைமுறை அச்சக முறைமை பரிச்சயமின்றியே போய்விட்டது. எஸ்.டி.சிவநாயகம் ஐயாவுக்கு பின்னர் இந்த மூன்று அச்சக முறைமைகளிலும் பரிச்சயமாகும் வாய்ப்பு பத்திரிகையாளன் என்ற முறையில் அவரது சிஷ்யனான எனக்குத்தான் கிடைத்தது என்பேன்.

எஸ்.டி.சிவநாயகம் ஐயா பற்றிய இந்தத் தொடரில் அவர் எழுத்துத் துறைக்கு அப்பால், பத்திரிகையில் தேர்ந்து விளங்கிய அச்சகத் துறை குறித்தும் விவரிப்பது தவிர்க்க முடியாதது என்று நினைத்தேன். அதனால் அந்த விடயத்துக்கு மூன்று தினங்களை கொடுக்க வேண்டியதாயிற்று.

இனி, மீண்டும் அவரது எழுத்து, சமூக, அரசியல், ஆன்மீகப் பணிகளின் பக்கம் திரும்புவோம்.

இது ஐயாவின் நூறாவது ஜெயந்தி தினத்தையொட்டி ஆரம்பிக்கப்பட்ட தொடர். நூறு நாள்கள் அவர் பற்றிய நினைவுகளை மீட்டு இத்தொடரை நிறுத்தலாம் என்று நினைக்கிறேன். இது 83 ஆவது அத்தியாயம். இன்னும் 17 அத்தியாயங்களில் இதை முடிவுறுத்த வேண்டும். எழுத வேண்டியவை அனேகம் உள்ளன. இயன்ற வரைச் சுருக்கி நிறைவு செய்யலாம் என்று எண்ணம். அவரின் ஆசியும் அருளார்ந்த வழிகாட்டலும் அதற்கு கிட்டும் என்று நம்புகிறேன்.

(வளரும்.....)


தினபதி
தமிழிலும் கிடைக்கும் வயது அத்தாட்சிப் பத்திரம்
காமராஜ் வருகிறார் தினபதி விருந்தினராக

சரியாக 55 வருடங்களுக்கு முன்னர் 1966 ஒகஸ்ட் 29 ஆம் திகதி வெளியான முதலாவது தினபதி இதழ். விலை 10 சதம்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 138



**369. ஓர் ஆக்கத்தின் ஆழமான வேர்கள் என்று எதைக் குறிப்பிடுகின்றீர்கள்?**

தமிழீழம் என்ற தீர்மானம் ஆக்கப்பட்டதின் பின் அதனை அடைவதற்கான அணுகுமுறைகள் அதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவை தேர்தல் காலத்திற்கான கொதிநீரும், முடிந்த பின் ஆறிவிட்டதாகவும் தான் இருந்தன. அப்படியான அணுகுமுறைகளும் அதற்கான கட்டமைப்புக்களும் அமைக்கப்பட்டிருந்தால் அரசியல் வாதிகளும் ஆயுதப்போராளிகளும் ஏன் சர்வதேச அமைப்புக்களும் கூட இணைந்து பயணித்திருக்கலாம்.

தமிழ் மக்கள் பொதுவாகவே பழும் தரும் மரங்களை, பயன்தருபவைகளை எவ்வளவோ தேடிப் பார்த்து கண்ணும் கருத்துமாக வளர்ப்பவர்கள், வாங்குபவர்கள். ஆனால் இங்கோ, நேரம் வசதிக்கேற்ப இடம்மாற்றி அதன் வளர்ச்சியை வீணடித்தார்கள். இஸ்ரேல்தான் தமது நாடு என்ற எண்ணப்பாங்கு, எந்நேரமும் அந்த மக்கள் மனதில் கொதிநிலையில் இருந்த மாதிரி எங்களிடையே எல்லோரிடமும் அது வளர்க்கப்படவில்லை. விடுதலைப் புலிகள் அப்படியான ஓர் உறுதித்தன்மையில் இருந்தார்கள் எனலாம்.

தமிழ் அரசியல் கட்சிகள், மற்றைய விடுதலைப் போராட்டக் குழுக்கள் அமைத்த எல்லா கட்டமைப்புகளுமே தம்மை மையப்படுத்தினவேயொழிய தமிழீழத்தை ஆணிவேராகப் பார்க்கவில்லை. அது போலவே விடுதலைப் புலிகளும் தங்களை ஏகபிரதிநிதிகள் என்பதை மையப்படுத்தி நின்றதாலும் அவை ஆழ ஊடுருவி, வேர்கள் வைத்து, கால நிலைகளை எதிர்த்து நின்று வளரமுடியவில்லை.

**370. நாடு கடந்த தமிழீழ அரசு அடையாள அட்டைகள் பற்றி செய்த தீர்மானத்தில் நியாயம் இருந்ததாகப்பட்டதே?**

அதனை அவர்கள் அரசாங்கத்தின் கடவுச்சீட்டு (Passport) என்ற ரீதியில் கொடுக்க வேண்டும் என்று ஆராய்ந்தால் அதனால் சில சட்டச்சிக்கல்களை யோசித்திருக்கலாம். அது நியாயமானதே. அதாவது எந்த நாட்டினதும் அனுமதியோ அனுசரனையோ இல்லாது ஓர் அரசாக இயங்க முயற்சிக்கிறார்கள் எனக் கஷ்டங்களை எதிர்நோக்கியிருக்கலாம். ஆனால் அவர்கள் தமிழீழத்துக் குடிமக்கள் என அடையாள அட்டைகளை தந்து, அவர்களின் அடையாளங்களை ஆதாரப்படுத்துவது அல்லது அவர்களின் நாடுகடத்தல்களால் அவர்கள் பழையபடியே ஸ்ரீலங்காவிற்கு பாரப்படுத்தலில் ஏற்படக்கூடிய பாதுகாப்பற்ற தன்மைகளை ஒரு அரசு என்ற ரீதியில் கணக்கெடுத்து வெளிப்படுத்துவது வேறொரு பரிணாமத்தை தரும். அப்படியின்றி தமிழரின் நிலை பற்றி சமர்ப்பணங்கள் தருவதும் மக்களை கூட்டி வைத்து ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதும் அவர்களை தமிழ் மக்களின் இன்னுமொரு சங்கமாகக் கணக்கெடுக்க வைக்குமேயொழிய அரசு என நாடு கடந்த நிலையிலும் கூட தனித்துவத்தை வளர்க்க விடாது. சிந்தனை நோக்கும் அதற்கான முனைப்பும் தான் முக்கியமானவை.





அகதிகளாகப் புறப்பட்டவர்களில் 90 - 99 வீத மானவர்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேறியதன் பின் பிறந்த மக்கள். அவர்கள் அறிந்ததும் வளர்ந்ததும் தமிழீழம்தான். மற்றப் பகுதிகளில் அவர்கள் வாழ்ந்ததில்லை. ஆகவே அதன் குடிமக்கள் எனத் தங்களது விண்ணப்பங்களில் பதிந்து, இன்று நாடற்றவர்கள் என்று சொல்வதை சர்வதேச ரீதியில் ஓர் அரசாக ஊக்குவித்திருக்க வேண்டும். சர்வதேசத்தில் அந்தரித்து நின்றவர்கள் எல்லோரையும் அகதி அந்தஸ்து கொடுக்காமல் திருப்பி அனுப்புவதானால் தமிழீழத்திற்குத் தான் அனுப்ப வேண்டும் என்பது நாடு கடந்த தமிழீழ அரசு முன்னெடுத்திருக்கக் கூடிய ஒரு சர்வதேச அரசியல் அழுத்தமாக இருந்திருக்கும். அதற்கான சட்ட ஆய்வுகளை பெற்று, அவற்றைச் செய்ய முயற்சித்திருக்கலாம். எல்லா வழக்குகளுமே வெற்றி பெற்றுவிடுவதில்லை ஆனால்அவைதாக்கங்களையும்அபிப்பிராயங்களையும் சர்வதேச மட்டங்களில் எழுப்புகின்றன.

அப்படி தமிழீழத்திற்கு அனுப்ப முடியாது எனத் தனியான சர்வதேச நாடுகள் ஒரு நிலையை எடுத்தால் நாடு கடந்த அரசு, ஐ.நாவுடனும் ஐ.நா. அகதிகள் ஆணையாளரோடும் ஈடுபட்டு அவர்களை தமிழர்பால் கரிசனை கொண்ட இன்னுமொரு நாட்டிற்கு அனுப்பி அரசியல் தீர்வு வரும் வரை அங்கிருத்தப்பட வேண்டும் என்று கோரலாம். ஸ்ரீலங்காவின் அரசியல் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை என்ற அரசியல் நிலைப்பாட்டிலேயே தமிழ் நாட்டில் குடியிருக்கும் மக்களை திருப்பி அனுப்பாமல் இந்தியா பராமரிக்கிறது. அப்படியானால், அதே அழுத்தங்கள் மற்றைய நாடுகளுக்கும் கொடுக்கப்படலாம்.

நான் உதவி செய்த விண்ணப்பதாரர்களை ஓர் உதாரணமாகக் கூறலாம். 1976 இல் அம்பாறை மாவட்டத்தில் வன்முறையால் குடும்பத்தை இழந்து தமிழ் நாட்டு அகதியாக வந்தவருக்கு பிறந்த ஒரு பெண் ஒருவர் தான் நேசித்த ஒருவருடன் கப்பல் பிரயாணம் செய்து ஆஸ்திரேலியா வந்தார். அங்கு அகதி முகாமில் தங்களின் நிலைமையைச் சொல்லி, தாங்கள் மணமுடிக்க இருப்பதால் அவர்களை சேர்ந்து வசிக்க அதிகாரிகள் அனுமதி கொடுத்தார்கள். அதில், அகதி முகாமில் இருந்து வெளியேறும் போது இருவருக்கும் ஒரு குழந்தையும் இருந்தது. அப் பெண்ணின் கணவன் வவுனியாவைச்சேர்ந்தவர், 2007 ஆண்டுப் பகுதியில் அகதியாக தமிழ்நாடு போனவர். அவரிடம் ஸ்ரீலங்கா அடையாள அட்டை இருந்தது. அப்பெண்ணிடம் தான் இந்தியாவில் பிறந்த, புழல் அகதிமுகாமில் இருந்து வளர்ந்ததற்கான சாட்சியங்கள் இருந்தன. எனினும் இவர் ஈழத்தமிழரா என்ற கேள்விக் குறி எழுந்தது. விண்ணப்பத்தில், அவள் தமிழீழத்தைச் சேர்ந்தவர் தற்சமயம் நாடற்றவள், ஸ்ரீலங்காவையே தெரியாது, அங்கு திருப்ப விரும்பவில்லை என விண்ணப்பிக்கப்பட்டது. முதலாவது முறையில், அப்பெண்ணினால் ஏன் ஸ்ரீலங்கா பிறப்பு சான்றிதழ்கள் பெறமுடியாது, பிள்ளைகளின் நிலை என்பனவும்மற்றைய அடையாள அடிப்படைகளில் அப்பெண்ணை திருப்பி அனுப்புவதானால் தமிழ் நாட்டுக்கே திருப்பி அனுப்ப வேண்டும்,

(10ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# தடுப்பூசி தொடர்பான போலி தகவல்களை நம்ப வேண்டாம்

## கிழக்கு சுகாதாரப் பணிப்பாளர் தௌபீக் தெரிவிப்பு



போலியான தகவல்களை நம்பாமல் 20 வயதுக்கு மேற்பட்ட சகலரும் கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறு கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ. ஆர்.எம்.தௌபீக் கேட்டுக் கொண்டுள்ளார்.

தடுப்பூசி தொடர்பாகத் தவறான அபிப்பிராயங்களோடு சிலர் இன்னும் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளாமல் இருக்கின்றார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவிக்கையில்–

கிழக்கு மாகாணத்துக்கென வழங்கப்பட்ட தடுப்பூசிகள் கணிசமான அளவு கிடைக்கப்பெற்று ஒவ்வொரு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

30 தொடக்கம் 60 வயதுக்கு மேற்பட்டோர்களுக்கும் முதலாவது தடுப்பூசி 100 சதவீதமும், இரண்டாவது தடுப்பூசி 90 சதவீதமும் ஏற்றப்பட்டுள்ளது.

தற்போது 20 வயது தொடக்கம் 29 வயதுக்குட்பட்டவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள்முன்னெடுக்கப்பட்டுள்ளதோடுதடுப்பூசிகள் தொடர்ந்தும் கிடைக்கப்பெற்று வருகின்றன.

இதுவரை தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாத 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் உடனடியாக அருகிலுள்ள தடுப்பூசி ஏற்றும் மையங்களுக்குச் சென்று தடுப்பூசியை கட்டாயம் பெற்றுக்கொள்ளவும். அண்மையில் ஏற்பட்ட மரணங்களில் 76 சதவீதமான மரணங்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதவர்களென அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளது.

இரு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் அவர்களின் பாதுகாப்பு அதிகமாகக் காணப்படுகின்றது.

கடந்த ஓகஸ்ட் 3 ஆம் மற்றும் 4 ஆம் வாரங்களில் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பானது டெல்டா வைரஸின் பரவலும் அதன் தாக்கமும் அதிகமான நோயாளர்களும் மரணங்களையும் சம்பவித்துள்ளன. ஆனால் இம்மாதத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைவடைந்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

# பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டால் வைரஸ் பரவல் மீண்டும் தீவிரமாகும்!

## வைத்தியர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை



நாட்டில் மதுபானசாலைகள் திறக்கப்படுவதால் அதன்மூலம் மக்களுக்குக் கொவிட் பரவும் அபாயம் உள்ளது. எதிர்காலத்திலும் இந்நிலைமைதொடர்ந்தால் ஆரம்பித்த இடத்துக்கே மீண்டும் செல்ல வேண்டி வரும். மாற்றுவழி எதுவும் இல்லை. என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுலில்உள்ளது. வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. இந்நிலையில் மது பானசாலைகளைத் திறப்பதற்கு இடமளிக்கப்பட்டமை ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும். மது பானசாலைகளைத் திறப்பதற்குக் கலால் திணைக்கள அதிகாரிகளின் அனுமதி அவசியம்.

அவர்களின் அனுமதியின்றி அதனைச் செய்யமுடியாது. எனவே, மது பானசாலைகள் திறக்கப்படுவதால் அதன் மூலம் மக்களுக்கு கொவிட் பரவும் அபாயம் உள்ளது. எதிர்காலத்திலும் இந்நிலைமை தொடர்ந்தால் ஆரம்பித்த இடத்துக்கே மீண்டும் செல்லவேண்டி வரும். மாற்று வழியில்லை.

மதுபானசாலைகளைத் திறப்பதற்கு அனுமதி வழங்கும் அதிகாரிகள் அவதானமாகவே இருக்க வேண்டும். மேற்கூறப்பட்ட நிலைமை ஏற்படுவதற்கு இடமளிக்கக்கூடாது. – எனத் தெரிவித்துள்ளார்.

# அரசுக்கு ஏற்றாற்போல் செயற்படாதமையால் பேராசிரியர் லக்ஷ்மன் பதவி விலக்கப்பட்டார்

## பேராசிரியர் கீதபொன்கலன் கருத்து



மத்திய வங்கியின் ஆளுநர் நியமனமும், மஹிந்த சமரசிங்கவின் நியமனமும் வேறாக பார்க்கப்பட வேண்டிய ஒன்று என அமெரிக்க முன்னணி பல்கலைக்கழகத்தில் அரசியல்துறை விரிவுரையாளராக இருக்கும் கீதபொன்கலன் தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நான் கொழும்பு பல்கலைக்கழத்தில் பேராசிரியராக பணியாற்றிய போது மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் பேராசிரியர் லக்ஷ்மன் கொழும்பு பல்கலைக் கழத்தில் உயர் பதவியில் இருந்தார். எனவே அவரை எனக்கு தனிப்பட்ட ரீதியில் நன்கு தெரியும்.

அவர் ஒரு கொள்கை ரீதியிலான ஒரு நபர் என்று சொல்லலாம். தனது கொள்கைகளில் நிலையாக இருந்த ஒருவரே பேராசிரியர் லக்ஷ்மன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் லக்ஷ்மன் அவர்கள் மத்திய வங்கியின் ஆளுநராக இருந்தபோது அரசாங்கம் தனக்கு ஏற்றது போல மத்திய வங்கியை பயன்படுத்திக் கொள்வதில் சிக்கல்கள் இருந்திருக்கலாம். அதன் காரணமாகதங்களது தேவைகளுக்கு ஏற்ப, அரசியல் ரீதியாக செயற்படக் கூடிய ஒருவர் ராஜபக்ஷ அரசிற்கு தேவைப்பட்டது. அதற்கு கப்ரால் ஒரு சிறந்த நபர் என்று கூறலாம். ஏனெனில் அவர் ராஜபக்ஷ குடும்பத்தின் நெருங்கிய நண்பர் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதால் அரசு பாரிய பொருளாதார சுமையை எதிர்கொள்கிறது

## வைத்தியர் ரத்நாயக்க கருத்து

இலங்கையில் கொவிட் தொற்றாளர்களுக்கு நாளாந்தம் சிகிச்சையளிப்பதற்காக அரசாங்கம் பாரிய அளவு சுமை ஒன்றை ஏற்க நேரிட்டுள்ளதாக மருந்துகள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சின் செயலாளர் வைத்தியர் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அந்தச் சுமையை குறைத்துக் கொள்வதற்கு இலங்கையர்கள் உடனடியாக கொவிட் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கொவிட் தொற்றுக்கு மத்தியில் இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

சாதாரண கொவிட் தொற்றாளர் ஒருவருக்கு தினசரி 1,800 முதல் 2,000 ரூபா வரையிலான பணம் சிகிச்சைக்காக செலவிடப்படுகின்றது.

தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளி ஒருவருக்கு தினசரி 75 ஆயிரம் ரூபா முதல் 2 லட்சம் ரூபா வரை செலவிடப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஒட்சிசன் உதவியுடன் ஒருவர் சிகிச்சை பெற்றால் இந்த தொகை மேலும் அதிகரிக்கின்றது. ஒரு கொவிட் தொற்றாளரிடம் செல்லும் வைத்தியருக்கு நாள் ஒன்றுக்கு 3 பி.ஈ. கிட் தேவைப்படுகின்றது.

ஒரு பி.ஈ. கிட்1,500 ரூபா மூன்றுக்கு 4,500 ரூபா செலவிடப்படுகின்றது. சாதாரண தொற்றாளரின் செலவுகளுடன் இதனையும் சேர்த்தால் பாரிய பணம் தேவைப்படுகின்றதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 4 கிராம உத்தியோகத்தர்களுக்கு வவுனியாவில் கொவிட் தொற்றுறுதி

வவுனியா மாவட்டத்தில் நான்கு கிராம அலுவலர்கள் கொவிட் தொற்றுக்குள்ளான நிலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாசெட்டிகுளம்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஆண்டியாபுளியங்குளம் கிராம அலுவலர் மற்றும் விடுமுறையிலிருந்த பெண் கிராம அலுவலர் ஆகிய இருவருக்கும் அன்டிஜன் பரிசோதனையில் கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன், வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கனகராயன்குளம் தெற்கு மற்றும் ஊஞ்சல் கட்டி ஆகிய பிரிவு கிராம அலுவலர்களுக்கு அன்டிஜன் பரிசோதனையில் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. குறித்த இருவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்தச் சுகாதாரப் பிரிவினர்நடவடிக்கைஎடுத்துள்ளனர்.

இதேவேளை, வவுனியா வடக்கில் ஏற்கனவே பிரதேச செயலாளர், இருகிராமஅலுவலர்கள் உள்ளிட்ட பல பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கொவிட் தொற்றுக்குள்ளாகி குணமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சீமெந்து வகைகளுக்கு வவுனியாவில் தட்டுப்பாடு

வவுனியாவில் சீமெந்துக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் கட்டுமானப் பணிகளை முன்னெடுக்க முடியும் என்று அரசாங்கம் அறிவித்திருந்தது. எனினும் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான சீமெந்துக்கு வவுனியாவில் திடீர் என தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக நகர்ப்புறம் மற்றும் கிராமப் புறங்களில் அமைந்துள்ள கட்டுமானப்பொருள்கள் விற்பனை செய்யும் வியாபார நிலையங்களிற்கு சீமெந்தை கொள்வனவு செய்வதற்காகச் செல்லும் பொதுமக்கள் அங்கு இல்லாமையால் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றமையை அவதானிக்க முடிகின்றது.

# மதுபான விற்பனையை நிறுத்த வேண்டும் அமைச்சர் பஸிலிடம் அவசர கோரிக்கை

ஊரடங்கு உத்தரவை தளர்த்துவதற்கு முன்னர் மதுபானங்களை விற்க அனுமதிப்பது பல பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என்று இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது. நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிற்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இலங்கை மருத்துவ சங்கம் இந்த விடயத்தைக் கூறியுள்ளது.

தற்போதைய நிலையில் மது பானங்களை விற்க அனுமதிப்பதால் கொவிட் –19 வைரஸ் பரவல் அதிகரிக்கும், அத்துடன் குடும்ப வன்முறை மற்றும் சாலை விபத்துகள் அதிகரிக்கும் என அந்தச் சங்கம் கூறியுள்ளது. இதனால் மதுபான விற்பனையை நிறுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நிதி அமைச்சரிடம் மருத்துவ சங்கம் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது. இதேவேளை, தற்போதைய நிலையில், எந்த வணிக வளாகத்தையும் திறக்கப் பொருத்தமான சூழல் இல்லையென சுகாதார சேவைகள் துணை பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதனிடையே, நாளாந்த கொவிட் நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கை குறைவதற்கான அடிப்படையை அறிவியல் ரீதியாக விளக்கும் திறன் சுகாதார அமைச்சுக்கு இல்லை என இரசாயன ஆய்வுகூட தொழில் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் கூறியுள்ளார்.

# நாட்டில் அடக்குமுறையை நிறுத்த வேண்டும் சுயாதீன அமைப்புகள் பிரதமரிடம் கோரிக்கை

கல்வி இராணுவமயமாக்கலுக்கு எதிராகப் போராடும் மாணவர் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களின் நியாயமற்ற ஒடுக்குமுறையை முடிவுக்குக் கொண்டு வருமாறு பல அரச மற்றும் தனியார்துறை தொழிற்சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு சுயாதீன அமைப்பு பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொத்தலாவல சட்டத்தின் கீழ் இலவசக் கல்வியின் பேரழிவுக்கு எதிரான அமைதியான போராட்டத்தின்போது எந்த மோதலையும் உருவாக்க வேண்டிய அவசியமில்லை எனவும், அந்த அடிப்படையில் எடுக்கப்பட்ட அடக்குமுறை நடவடிக்கைகளால் நாட்டில் உள்ள புகழ்பெற்ற தொழிற்சங்கங்கள் அதிருப்தி அடைந்துள்ளன எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எழுதிய கடிதத்தில், பொதுச் சொத்து மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கொத்தலாவல சட்டத்துக்கு எதிராக ஒகஸ்ட் 3 ஆம் திகதி, மாணவர் இயக்கம், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் நடத்திய போராட்டம் தொடர்பாக, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உட்பட ஐந்து மாணவர் மற்றும் சமூக ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொதுச் சொத்து மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு மத்திய நிலையத்தின் இணை இணைப்பாளர்களான சில்வெஸ்டர் ஜயக்கொடி மற்றும் ரஞ்சன் சேனாநாயக்க ஆகியோர் கையெழுத்திட்ட கடிதத்தில், தொழிற்சங்கத் தலைவர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களை இரகசிய பொலிஸார் தேடுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களுக்குப் பிணை வழங்கப்படவில்லை, மாணவர்களின் பரீட்சைகள் மற்றும் சில கைதிகளின் உடல்நலக்குறைவு ஆகியவற்றைக் காரணம் காட்டி நியாயமான பிணை விண்ணப்பங்கள் செய்யப்பட்டிருந்தாலும், அவை நிராகரிக்கப்பட்டுள்ளன.

தற்போது சிறையில் இருக்கும் பல சகோதர சகோதரிகள் கொவிட் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களுக்குத் தேவையான வைத்திய வசதிகள் கூட வழங்கப்படாமல் சிரமத்துக்கு உள்ளாகின்றனர் எனவும் தொழிற்சங்கத் தலைவர்கள் பிரதமருக்குத் தெரிவித்துள்ளனர்.

நியாயமற்ற அடக்குமுறை நடவடிக்கைகள் அரசாங்கத்தின் விம்பத்தைக் கடுமையாகப் பாதிக்கும் என அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

'அனைத்து பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் ஏற்பாட்டாளர் உள்ளிட்டவர்களுக்குப் பிணை வழங்குமாறு நியாயமான கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும், அதனை வழங்காமல், தோட்ட சேவையாளர் சங்கத்தின் தலைவர் சதுர சமரசிங்க, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பின், கொத்தலாவல சட்டத்துக்கு எதிரான செயற்குழு உறுப்பினர் பேராசிரியர் மஹிம் மெண்டிஸ் மற்றும் பிற தொழிற்சங்கத் தலைவர்களை கைது செய்வதாக அச்சுறுத்துவதானது, நாட்டின் நீதி மற்றும் அமைதியை நிலைநாட்டுவதாக உறுதியளித்து ஆட்சிக்கு வந்த உங்களுக்கும், உங்கள் அரசாங்கத்தின் விம்பத்திற்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை, பொது மற்றும் தனியார் துறைகளில் பல தொழிற்சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும், ஒரு சுயாதீன அமைப்பாக, பொதுச் சொத்து மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு மத்திய நிலையம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

கருத்து வெளியிடுதல், எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மற்றும் அதற்கென ஒன்றிணைதல் போன்ற விடயங்கள் தொடர்பில், அரசியல் யாப்பு ரீதியாகவும், சர்வதேச ரீதியிலும் அரசாங்கம் ஏற்படுத்திக்கொண்ட சமவாயங்களுக்கு எதிராகவும், செயற்படுவதைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென, தொழிற் சங்கத் தலைவர்கள் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலை நீடிக்குமானால், தொழிற்சங்க உறுப்பினர்கள் உட்பட ஒட்டுமொத்த மக்களும் வேறு நடவடிக்கைகளில் இறங்க வேண்டியேற்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, அனைத்து ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளையும் நீக்கி தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும் விடுவிக்கவும், மாணவர் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களைக் கைது செய்வதைத் தடுக்கவும், இரண்டு தொழிற்சங்கத் தலைவர்களும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடிதத்தின் நகல்கள் நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்து கட்சித் தலைவர்களுக்கும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச தொழிலாளர் அலுவலகத்தின் தலைவர், மனித உரிமைகள் அலுவலகத்தின் இலங்கை பணிப்பாளர், ஐக்கிய நாடுகள் இலங்கை அலுவலகம் ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## யாழில் வீடொன்றுக்குள் அடாவடியில் ஈடுபட்டு தப்பிச் சென்ற குழு சிக்கியது!

பாசையூர் பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்து, அடாவடியில் ஈடுபட்டுத் தப்பித்த குழுவைச் சேர்ந்த 7 பேர், யாழ்.பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் இடம்பெற்று அரை மணி நேரத்தில், இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதென பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பாசையூர் அந்தோனியார் ஆலயத்துக்கு அருகிலுள்ள வீடொன்றுக்குள், கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் புகுந்த 7 பேர் கொண்ட குழுவொன்று, பெறுமதியான பொருள்களை உடைத்து, அடாவடியில் ஈடுபட்டதுடன் வீட்டிலிருந்தவர்களையும் அச்சுறுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இதன்போது சம்பவம் அறிந்து அந்த இடத்துக்கு விரைந்த யாழ்.பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் விசாரணையை முன்னெடுத்தனர்.

குறித்த விசாரணையின் அடிப்படையில் 3 மோட்டார் சைக்கிள்களில் பயணித்த 7 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து வாள் ஒன்றும் இரண்டு மரக்கட்டைகளும் கைப்பற்றப்பட்டன.

பாசையூர், மணியந்தோட்டம் பகுதிகளைச் சேர்ந்த 22 வயதுக்கும் 27 வயதுக்கும் உட்பட்ட 7 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 7 பேரும் யாழ்.பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 2020 க.பொ.த. உயர் தரப் பரீட்சை வெட்டுப் புள்ளி ஒக்ரோபரில் வெளியீடு

2020 உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான வெட்டுப் புள்ளிகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் வெளியிடப்படும் என்று இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாட்டில் கடந்த ஏப்ரல் மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகிய மூன்றாவது கொவிட் - 19 அலையின் தாக்கம் காரணமாக உண்டான பல சிக்கல்களால் வெட்டுப் புள்ளிகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டது.

இதற்கிடையில் பழைய மற்றும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் 2020 உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக நுழைவுக்கான மாவட்ட வாரியான சதவீதங்களை இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டது.

அதன்படி மொத்தம் 40 ஆயிரம் விண்ணப்பதாரர்கள் அரச பல்கலைக்கழகங்களுக்குள் சேர்க்கப்படுவார்கள்.

மருத்துவம் மற்றும் பொறியியல் போன்ற பட்டங்களுக்கான பல்கலைக்கழக சேர்க்கை இந்த ஆண்டு அதிகரிக்கப்பட்டுள்ளது.

2020 உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில், 2021 டிசெம்பர் மாதத்துக்குள் மாணவர்களை பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கூறியுள்ளது.

## உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்; விசாரணைகள் திருப்தி அளிக்கின்றன

### அமைச்சர் வீரசேகர பெருமிதம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகள் திருப்தியளிக்கின்றன என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அதாவது, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை தாமதமானது என பல்வேறு தரப்பினர் கூறிய குற்றச்சாட்டுகளை அவர் கடுமையாக மறுத்துள்ளார்.

மேலும், இலங்கையிலும் உலகிலும் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களுடன் ஒப்பிடுகையில், தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த தாக்குதல் தொடர்பாக 5 உயர் நீதிமன்றங்களில் இதுவரை 9 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையுடன் 25 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, விசாரணை நடத்த மூன்று நீதிபதிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது. தாக்குதல் தொடர்பாக இதுவரை 23 ஆயிரத்து 700 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும்



அமைச்சர் சரத் வீரசேகர கூறியுள்ளார்.

அந்தவகையில், கிட்டத்தட்ட இரண்டரை வருடங்களாக நடந்து வரும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் திருப்திகரமாக இருக்கின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

## 6 மாதக் கட்டணம் செலுத்தாத அனைவருக்கும் நீர் வெட்டு!

### ஏற்கனவே 73 ஆயிரம் பேர் அடையாளம்

கொழும்பு, செப். 22

ஆறு மாதங்களுக்கு மேலாக கட்டணத்தை செலுத்தாத 73 ஆயிரம் பேருக்கு நீர்விநியோகத்தை நிறுத்த தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தீர்மானித்துள்ளது.

குறித்த 73 ஆயிரம் பேரிடம் இருந்து ஒரு கோடியே 45 லட்சம் ரூபா செலுத்தப்படாமல் இருப்பதாகவும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

இவ்வாறு கட்டணம் செலுத்தப்படாதமையால் திணைக்களத்துக்கு 80 லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

6 மாதங்களுக்கு மேல் தண்ணீர் கட்டணம் செலுத்தாதவர்கள் அதற்குரிய கொடுப்பனவுகளை செலுத்துமாறும் குறும்செய்தி ஊடாக கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதற்கமைவாக இதுவரை 100 பேர் மட்டுமே அதற்கான கட்டணங்களை செலுத்தியுள்ளனர் எனவும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது

சுற்றுலாத் துறையின் வீழ்ச்சியால் நாடு முழுவதும் உள்ள பல ஹோட்டல்கள் நீர் கட்டணத்தை செலுத்தவில்லை என்றும் இந்த நிறுவனங்களும் வாடிக்கையாளர் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இருபது நாள்களில் 2,222 பேருக்கு வவுனியாவில் கொரோனாத் தொற்று!

வவுனியா மாவட்டத்தில் இம்மாதம் 20 ஆம் திகதி வரை 2 ஆயிரத்து 222 பேர் கொரோனா வைரஸ் தொற்றாளர்களக அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன் 106 பேர் உயிரிழந்துள்ளனர் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அதாவது நாட்டில் வைரஸ் தொற்றால் ஏற்படும் உயிரிழப்பு வீதத்தில், வவுனியாவில் மரணிப்போரின் தொகை பாரியளவில் காணப்படுவதாக சுகாதாரப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வவுனியாவில் மக்களின் அசமந்தமான செயற்பாட்டால் மரண தொகை கட்டுக்கடங்காமல் செல்கின்றது. இவர்கள் இதன் பாரதூரமான தன்மையை உணரவில்லை. இது பாரிய ஆபத்தான நிலைமையை ஏற்படுத்தலாம் என சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆகவே, வவுனியா மாவட்டத்தின் நிலை தொடர்பில் மக்கள் சிந்தித்து, சுகாதார நடைமுறைகளை இறுகப் பின்பற்றி செயற்பட வேண்டும் என சுகாதாரப் பிரிவினர் வலியுறுத்தியுள்ளனர்.

# ஈழத் தமிழர்களை கைவிட்டமையால் இன்று தடுமாறும் நிலையில் இந்தியா



இந்திய அமைதிப்படை (IPKF) (1987 - 1990) இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு வந்தபோது அவர்களை பூமாலை தூவி, ஆரத் தழுவி வரவேற்றிருந்தது தமிழர் சமூகம். பாஞ்சாலியை துகிலுரிந்த போது அவளது மானம் காக்க வந்த கிருஷ்ணன் போலவே இந்தியாவையும் பார்த்தது ஈழத்தமிழ் சமூகம். ஆனால் களைத்துப்போன துச்சாதனனை ஓய்வெடுக்க வைத்துவிட்டு தானே துகிலுரிந்தது போல ஈழத்தமிழர்களை சிரிக்க வைத்தே கழுத்தறுத்து மகா அயோக்கியத்தனம் பண்ணியது இந்தியா. அப்போதே தெரியும் விடுதலை பெற்றுத்தர அல்ல, படுகொலை செய்யவே இங்கு புகுந்தது இந்தியா என்று. வைத்தியசாலை படுகொலை, வல்வெட்டித்துறை படுகொலை சில உதாரணங்கள் மட்டுமே.

இந்தியா - சிறிலங்கா ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு மூன்றரை தசாப்தங்கள் கடந்து விட்டன. அந்த ஒப்பந்தம் எந்தப்பயனுமின்றி காற்றோடு காற்றாக கலந்து கரைந்து போயிற்று. அதுகுறித்து மீண்டும், மீண்டும் அலட்டிக் கொள்வதில் அர்த்தமில்லை. பதின்மூன்றாவது சீர்திருத்தம் அவ்வப்போது இந்தியா தனக்குத் தேவையென்று வரும்போது மட்டும் தூசு தட்டி எடுத்து தமிழர்களை ஏமாற்றியும் இலங்கையை மிரட்டியும் தனது காரியத்தைச் சாதிக்கும்.

1987இன் முன்னர் ஈழத்தமிழர் நிலை எப்படி இருந்ததோ அதைவிட மோசமான நிலையில் தமிழர் தாயகம் 2009 யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் உள்ளது. ஈழத்தமிழனின் இழிநிலை இங்கு சொந்த இடத்திலுள்ள கடலோரமாக காற்று வாங்கப் போவதற்கு கூட அடையாள அட்டை தேவை, போரில் இறந்து போன உறவினரை நினைவுகூரவும் விளக்கேற்றவும் தடை. தேசியப் பாதுகாப்புக்கு இவை அச்சுறுத்தலாம். அருகிலுள்ள காவல் நிலையத்தில் அலுவல் பார்க்க வேண்டுமெனில் சிங்களம் தெரிந்தவர்களுடன்தான் செல்லவேண்டும். இப்போது மாகாண பிரதம செயலாளரைச் சந்திக்கவும், பிரதேச செயலகங்களிலும் அதே நிலைதான். தேசிய கீதம் சொந்த மொழியில் இசைக்க நாதியில்லை. அந்த அளவுக்கு ஈழத் தமிழரின் இழிநிலை இன்று. யார் பொறுப்பு? எவரெல்லாம் யுத்தத்திற்காக சிறிலங்காவுக்கு உதவினார்களோ - இந்தியா உட்பட - அவர்கள் இதற்குப் பொறுப்பேற்க தயாரில்லை போலும். முக்கியமாக இந்தியாவுக்கு இதில் நிறைய பங்குண்டு. “இந்தியா உதவியிராவிடில் போரில் வென்றிருக்க முடியாது என இலங்கை அரச தரப்பிலும் படைத் தரப்பிலும் பலசந்தர்ப்பங்களில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது.

போருக்கு உதவியது மட்டுமல்லாது ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு முண்டு கொடுத்து உதவி, ஈழத் தமிழர்களுக்குத் தொடர்ந்து வஞ்சகம் இழைத்து வருகிறது இந்தியா. இந்தியாவின் இலக்கு போராளிகள் தலைமையையும் விடுதலைப் புலிகளையும் என்ன விலை கொடுத்தாவது ஒழிப்பதுதான். 2009 இல் அந்தப் படு பாதகச்செயலை செய்து முடித்திருக்கிறது. இதற்காக வயது வேறுபாடின்றி, ஈழத்தமிழர்கள் பல்லாயிரம் பேர் ஈவிரக்கமின்றி கொன்றொழிக்கப்பட்டனர். இதற்கு உதவியதும் இந்தியாவே.


சிவசங்கர் மேனன் அவர்கள் தாம் எழுதிய நூல் ஒன்றில் இந்திய மத்திய காங்கிரஸ், தமிழக தி.மு.க. ஆதரவுடன் இதனைச் செய்து முடித்ததாக தெளிவாக எழுதியுள்ளார் என நம்பப்படுகின்றது. புலிகளையும் போர்க்குற்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென்ற கூறும் தமிழ் தரப்புக் கட்சியினர் IPKF 1987 - 1990 காலப்பகுதியில் ஈழத்தமிழர்மீது மேற்கொண்ட அயோக்கியத்தனம் படுகொலைகள் பற்றியும் விசாரிக்க வேண்டும் என ஏன் கோரவில்லை?

போரின் பின்னர். முல்லைத்தீவில் மணலாறு வெலி ஓயா’வாக மாறி, புதிய சிங்கள பிரதேச செயலாளர் பிரிவாயிற்று. மன்னார் தென் எல்லையோரமாக இன்னொரு சிங்கள பிரிவை உருவாக்கும் போல் தெரிகிறது. வடக்கில் சில தீவுகளும், பூநகரி கரையோரம் போன்றவை சீனர் வசமாயிற்று. வலிவடக்கு படையினரின் விவசாயப் பண்ணைகளாயிற்று. 13 ஆவது ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட எவையும் இதுவரை நிறைவேறவில்லை. திடீர் திடீரென இந்தியாவிலிருந்து அடிக்கடி பல அதிகாரிகள் வருவர். ஏதோ சொதப்பி விட்டுப் போவர். இந்த வரிசையில், இப்போது - இந்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் முரளி அவர்கள், சமத்துவம், நீதி, அமைதி, கௌரவம் ஈழத் தமிழருக்கு வழங்க வேண்டும் என்பதில் இந்தியா உறுதி கொண்டுள்ளது” எனப் புதுக்கதை ஒன்றை அவிழ்த்து விட்டுள்ளர். வடக்கு - கிழக்கு இணைப்பு, வெலி ஓயா சிங்கள் பிரிவு ஒன்றினால் துண்டாடப்பட்டு பத்தாண்டுகள் கடந்து விட்டன. கொக்கிளாய், நாயாறு ஏரிகளும், இப்போது வட்டுவாகலினதும் கதையும் முடியப்போகிறது. மன்னாரில் தம்பப்பன்னி, நரிக்காடு, மடுரோட் எல்லாம் பறிபோய்விட்டன. இவை போதாதென்று பூநகரி கௌதாரிமுனை, தீவகப்பகுதியில் சில தீவுகள் சீனாவுக்கு தாரைவார்த்தாயிற்று. படைத்தரப்புக்கு காணி இன்னும் தேவையாம். வலிவடக்கு மக்களின் காணிகளில் படைத்தரப்பினரின் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் தொடர்கின்றன. மயிலிட்டி துறைமுகம் சிங்கள மீனவர் வசமாயிற்று. கடற்றொழில் அமைச்சரைக் கொண்டுவித்து வடக்கில் பாரிய துறைமுகங்களை அமைக்க அரசு படாத பாடுபடுகிறது. அவ்வாறு அமைக்கப்பட்டால் சிங்கள மீனவர்களுக்கும் அது பெரும் வரப்பிரசாதமே.

போரின் முன்னர் ஈழத்தமிழர் பாதுகாப்புடன் மிகுந்த கௌரவத்துடனும் வாழ்ந்தனர். சமூக சீர்கேடுகளுக்கு இடமில்லை. கசிப்பு உற்பத்திக்கும், கஞ்சாக் கடத்தலுக்கும், வன்முறைகளுக்கும் இடமில்லை. போரின் பின்னரேயே நாசகார செயல்பாடுகளும், வாள்வெட்டு அட்டூழியங்களும் எல்லை மீறிச்சென்று ஈழத்தமிழர்களை படுகுழியில் கொண்டு போய் தள்ளியிருக்கிறது.

(10ஆம் பக்கம் பார்க்க)







# ஈழத் தமிழர்களை .....

இதனிடையே தமிழக முதல்வர் அங்கு இடம்பெயர்ந்து முகாம்களில் வாழுகின்ற ஈழத்தமிழர்களுக்கு கௌரவமான பெயரை வைத்துள்ளாராம். அவர்களது மேம்பாட்டுக்கு உதவப்போவதாகவும் கூறியிருக்கிறார். முப்பது ஆண்டுகளின் பின்னர் இப்போதுதான் அவருக்கு ஞானம் தட்டியிருக்கிறது. ஈழத்தமிழர்களை அவர்களது சொந்த நிலங்களில் கௌரவத்துடன் வாழ வழிசமைப்பதற்கான எந்தத் திட்டமும் அவர்களிடம் கிடையாது.

இதனிடையே சிறைச்சாலைக்குள் பொறுப்பான அமைச்சர் ஒருவர் அனுராதபுரம் சிறைச்சாலைக்குள் நுழைந்து தமிழ் அரசியல் கைதிகளை துப்பாக்கிகொண்டு மிரட்டி காவாலித்தனம் பண்ணியிருக்கிறார். காட்டுமிராண்டிகளெல்லாம் அமைச்சரானால் இந்த நாடு எப்படி உருப்படும்?

இதனிடையே இந்திய இழுவைப்படகுகள் வட பகுதி கடலில் அத்துமீறி நுழைந்து உள்ளூர் படகுகளை முட்டி மோதி உடைத்துச் சென்றிருக்கின்றன. இரு மீனவர்கள் என்ன ஆனார்கள் என்பது இதுவரை தெரியவில்லை. அத்துடன் பல மில்லியன் ரூபா பெறுமதியான வலைகளையும் அறுத்தெறிந்திருக்கிறது. இந்த அக்கிரமங்களுக்கு முடிவில்லை. தொப்புள் கொடி உறவுகள் செய்யும் வேலையா இது? வடபகுதி கடற்பரப்பில் கடற்படையினர் எதற்கு? யாழ்ப்பாணத்தில் இந்திய துணைத் தூதரகமும் எதற்கு? ஐ.நா. மனித உரிமைப் பேரவை கூடும் காலத்திலும் தேர்தல் காலங்களிலும் பன்னாட்டு தூதுவர்கள் யாழ்ப்பாணம் ஓடோடி வந்து சமயப்பெரியார்களையும் அரசியல்வாதிகளையும் சந்தித்து வாக்குறுதிகளை அள்ளி வீசுவது வழமை. ஐ.நா. சபை கூடி கலைந்தவுடன் எல்லாம் புஸ்வாணமாவதும் வாடிக்கையாகிவிட்டது. இம்முறையும் அதே பல்லவிதான். ஐ.நா. அமைப்பு அமைதியான ஓர் நீரோடையல்ல. அது ஆபத்தான முதலைகள் வாழும் இடத்தை ஒத்தது. போர் முடிவுற்று பத்தாண்டுகள் கழிந்த நிலையில் இந்தியா உட்பட ஐ.நா. அமைப்பினால் ஈழத்தமிழர் ஏமாற்றப்பட்டமையைத் தவிர எந்த விடிவும் இல்லை. இந்தியா ஈழத்தமிழர்களை சிரிக்க வைத்தே கழுத்தறுத்துள்ளது. இப்போது தலிபான் எழுச்சி வடமேற்கு இந்தியாவை கிலி கொள்ள வைத்துள்ளது.

தெற்கே இலங்கையில் சீன ஆதிக்கம் இந்தியாவுக்கு தலையிடி கொடுத்துள்ள, அதே வேளையில் தலிபான்களின் மீள் எழுச்சி இன்னுமொரு நெருக்கடியாகவே இருக்கப்போகின்றது. ஈழவிடத்தில் இந்தியா விட்ட மாபெரும் தவறு யுத்தத்திற்கு உதவி, தமிழர் தாயகப் பகுதிகளை சிங்கள அரசுக்கு தாரை வார்த்ததுதான். இதனால் பசித்திருந்தவனுக்கு பாயாசத்துடன் விருந்து வைத்த மாதிரி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கொழும்பு சீனாவிடம் சிக்கியிருக்கிறது. அம்பாந்தோட்டை ஏற்கனவே பறி போயிற்று.

பார்க்கலாம் வேடிக்கைகள். போகப்போக இப்படிப் பல நடக்கும்.







யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின், சட்டத்துறையில் பயில்வதற்காக 2019 / 2020 கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை, முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

சட்டத்துறைத் தலைவர் திருமதி தூனி சயந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பதிவாளர் வி. காண்டீபன், கலைப் பீடாதிபதி கலாநிதி கே. சுதாகர், மாணவர் நலச் சேவைகள் பணிப்பாளர் கலாநிதி சி. ராஜ்உமேஷ், பதில் நூலகர் திருமதி ச. கல்பனா ஆகியோர் கலந்து கொண்டு புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டுதல்களை வழங்கினர்.

மாணவர் ஒழுக்காற்றுப் பணிப்பாளர் பேராசிரியர் கே. வேலாயுதமூர்த்தி, சட்டத்துறை விரிவுரையாளர்கள், சட்டத்துறை மாணவர்கள், புதுமுக மாணவர்கள் உட்பட பலர் நிகழ்நிலை ஊடாகக் கலந்து கொண்டனர்.

# இனப் படுகொலையும் .....

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்றில் தமிழ் ஈழத்தில் முறையான சான்றிதழ்களின் அடிப்படையில் தன் மக்களோடு சமூகமாக சேர்ந்து வசிக்க வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என வாதிக்கப்பட்டது. அப்பெண்ணுக்கு ஸ்ரீலங்காவின் குடியுரிமை சான்றுகள் பெறுவதில் அதீத கஷ்டங்கள் உண்டு. ஆனால் அப்பெண் இந்தியாவிலிருந்து வந்ததால் தமிழ்நாட்டிற்கே திருப்பி அனுப்பப்படவேண்டும் என்ற பரிந்துரைகள் முதல் சுற்றில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆனாலும் தங்களது பாதுகாப்பில் இருந்து வெளியேறிய ஒருவரை இந்தியா மீளப்பெறுமா (அப்பெண்ணினது குடும்பம் இன்றும் புழல் முகாமில் இருந்தாலும்) என்பதும், ஆஸ்திரேலியா அப்பெண்ணை எங்கு திருப்புவதற்கு முயற்சிக்கும் என்பவையும் சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் இனி நீதிமன்றங்களில் ஆராயப்பட வேண்டியவை.

**371. தமிமீழம் என்ற நாடு உருவாகவில்லையே?**

சட்டரீதியாக உருவாக்கப்படவில்லை என்பது உண்மைதான். ஆனால் நிழல் நிலையில் நாட்டிலும் தமிழ் மக்களிடையே புலத்திலும் அது இயங்குகிறது என்பதின் வெளிப்படைதான் என நாடு கடந்த தமிழீழ அரசை மக்கள் பார்க்கிறார்கள். அதன் தோற்றமும், நோக்கமும் அதுவானால் அந்த அரசு அந்தத் திசையில் பயணிக்க வேண்டும். தனி நாடு என்ற தாற்பரியத்தில் அதனை கொள்ளாவிட்டாலும், ஒரு தேசமாக அதனைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் வடக்கு, கிழக்கு அமைந்த பிரதேசங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்தியாவிற்கு இடம்பெயர்ந்து சென்ற மக்கள் ‘அவர்கள் எந்தெந்தப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்விற்கு உள்ளாக்கப்பட்டார்களோ அவர்கள் அந்தந்த இடங்களுக்கு திரும்பி போவதற்கான நிலைமைகளும் வழிமுறைகளும் ஏற்படுத்தப்படும்’ என்பது இந்திய ஒப்பந்தத்தின் ஒரு சரத்து.

இந்தியாவே, அவர்கள் தமக்கான தமிழ்தேசத்தில் குடியமர்த்தப்படுவார்கள், அதற்கான நிலைமைகள் ஏற்படுத்தப்படும் என்று ஏற்றிருந்ததால் அவற்றை முன்னெடுக்காது, எப்பொழுதும் தங்கள் பிரதேசங்கள் பறிபோகிறது என சமர்ப்பணங்கள் மாத்திரமே கொடுத்து வருவதில் அர்த்தமில்லை. தமிழ் நாட்டிலுள்ள அகதிகள் தத்தமது பழைய இடங்களுக்கு திருப்பி மீள்குடியேற வழிவகைகளை செய்ய வேண்டும் என்றும், இந்திய ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் தமிழ் மக்களின் அரசியல் தலைவர்களோ அவர்களின் ஒட்டுமொத்தமான அமைப்புக்களோ இதுவரை கேட்டதில்லை. அப்படியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, நாடு கடந்த தமிழீழ அரசின் மந்திரி சபையினருக்கும், வண பிதா இம்மானுவேலுக்கும் கூட, அவர்களது பிண்ணனியில், இந்திய அரசு அவர்களுக்கு மாறாக ஏற்படுத்திய தடைகளை விலக்கி அந்த முயற்சிகளில் பங்குபற்ற அனுமதித்த போதும் அவர்கள் அதை தவிர்த்துக் கொண்டார்கள். இடம்பெயர்வுகளுக்கு ஆளாக்கப்பட்ட மக்கள், அவ்விடங்களுக்குத்தான் திரும்ப வேண்டும் என்பது இந்தியா ஏற்றுக்கொண்ட நிலையாயின் அதனை வற்புறுத்த அழுத்தங்கள் கொடுக்கப்படுவதில் தவறுகள் காண முடியாது. அதற்கான மனோபாவம் மக்களுக்கிடையே வரவேண்டும்.

மேலும் தமிழ்ப்பிரதேசங்கள் எவையென பிரதேச சபைகளின் வளர்ச்சி (District Development Council) என்ற அடிப்படையில் ஜே.ஆருடன் ஏற்றுக்கொண்ட மசோதாவில் அவை அடக்கப்பட்டன என அமிர்தலிங்கம் தெரிவித்தார். அதன் அடிப்படையிலேயே தேர்தல் ஒழுங்குபடுத்தப்பட்டது. ஆனால் அந்தத் திட்டத்திற்கான தேர்தல், விடுதலைப் போராளிகளின் வன்முறைகளால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. பின் சந்திரிக்காவின் தீர்வு திட்டத்திலும் வட கிழக்கின் பிரதேச சபைகளை உள்ளடக்கியே, அவற்றிற்கு சுயாட்சி தருவதான அபிப்பிராயங்கள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ் மக்கள் இன்றும் வடக்குக் கிழக்கை பொதுவாகத் தமிழர் தேசம் என்று கூறுகிறார்களேயொழிய, இருப்பில் அவர்களிடம் எவ்வளவு பிரதேச சபைகள் உண்டு என்று கணக்கெடுப்பதில்லை. ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதேச சபைகளில் வடக்கில், புத்தளம், மன்னார் ஈறாகப் பலவும் கிழக்கில் அம்பாறை முதல் பொத்துவில் வரை பரந்திருந்தவற்றை தக்கவைத்ததும் இல்லை. தீர்மானங்களிலேயே காலங்கள் கழிந்தன.

(வளரும்.....)

## கொலையாளியே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல், துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் 5 கட்டளைகள், விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான 6 கட்டளைகள்,வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான 03ஒழுங்கு விதிகள், வெளிநாட்டு செலாவணிச்சட்டத்தின் கீழான கட்டளை மற்றும் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு)சட்டத்தின் கீழான ஒழுங்கிவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்திய அவர், மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாளை (இன்று) ஐ.நா.வில் உரையாற்றவுள்ளார். அவர் ஐ.நா.வின் செயலாளருடனும் பேசியுள்ளார். அப்போது இலங்கையில் காணாமல்போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குவதாகக் கூறியுள்ளார். இந்த நாட்டிலே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்றால் அவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள். 2008,2009 ஆம் ஆண்டுகளில் வடக்கில் சகல இடங்களிலிருந்தும் மக்கள் விரட்டப்பட்டு முள்ளிவாய்க்கால் வரைக்கும் கொண்டு செல்லப்பட்டனர். 4 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள். இவர்களில் பலர் தங்களுடன் வந்த பிள்ளைகளை, கணவன்மார்களை, தாய், தந்தையரை, சகோதர - சகோதரிகளைக் கண்கண்ட சாட்சியமாக ஓமந்தையில் வைத்து இராணுவத்திடம் ஒப்படைத்தார்கள்.

ஓமந்தையில் வைத்து இராணுவத்திடம் கண் கண்ட சாட்சியமாக ஒப்படைக்கப்பட்டவர்கள் எங்கே என்ற கேள்விக்கு மரணச் சான்றிதழ் வழங்குவது தான் இந்தநாட்டின் ஜனாதிபதியின் பதிலா? அப்படியானால் இந்த நாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் எல்லாம் கொலை செய்யப்பட்டுவிட்டார்களா? அவர்களுக்கு என்ன நடந்தது? இன்றும் கூட கிட்டத்தட்ட 60 க்கும் மேற்பட்ட தாய், தந்தையர் தங்களுடைய பிள்ளைகள் வருவார்கள் என்ற ஏக்கத்தோடு இறந்திருக்கின்றார்கள். இதனைவிட ஆயிரக்கணக்கான தாய், தந்தையர் இன்றும்தமது பிள்ளைகளின் வரவுக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறான நிலையில் ஐ.நாவுக்கு போய் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நான் காணாமல்போனவர்களுக்கு மரண சான்றிதழ் கொடுக்கின்றேன் என்று கூறுகின்றார்.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அண்ணா மஹிந்த ராஜபக்ஷ, அப்போது ஜனாதிபதியாக விருந்தபோது அப்போதிருந்த ஐ.நா. செயலர் பான் கீ மூனிடம் நாங்கள் நீதி வழங்குகின்றோம், பொறுப்புக்கூறுகின்றோம் என்று கூறினார். ஆனால், இது வரை எதுவும் நடக்கவில்லை.

இந்த அரசு மிக மோசமான முறையில் மக்களை பிழையான வழியில் கொண்டு செல்ல முனைகின்றது. நாங்கள் இன்று நடுத்தெருவில் விடப்பட்டுள்ளோம். 2008 ஆம் ஆண்டில் கிளிநொச்சியில் இருந்த மக்கள் இதே ஐ.நா. சர்வதேச நிறுவனங்களுக்கு முன்னால் சென்று எங்களை விட்டுப்போகாதீர்கள் என்று கையெடுத்து கும்பிட்டு அழுதார்கள். நீங்கள் போய் விட்டால் எங்களைப் படுகொலை செய்வார்கள். எங்களை இந்த இலங்கை அரசு கொல்லப் போகின்றது. தயவு செய்து போகாதீர்கள் என்று மன்றாடினார்கள் அப்போது பான் கீ மூன் இருந்தார். எமது மக்கள் போகாதீர்கள் எங்களை காப்பாற்றுங்கள் என்று கண்ணீரோடு கேட்டார்கள். ஆனால், எங்களை நடுத்தெருவில் விட்டு சென்ற ஐ.நா. சபையின் ஒவ்வொரு சர்வதேச நிறுவனங்களும் பொறுப்புக்கூற வேண்டும். என்ன நடந்தது என்பதனை ஆராய வேண்டும். இதனை நான் இந்த சபையின் ஊடாக தற்போதுள்ள ஐ.நா.வின் செயலரிடம் விநயமாக முன்வைக்கின்றேன்.

இன்று எமது மக்கள் சர்வதேச ரீதியான நீதியான விசாரணை வேண்டுமென கேட்கிறார்கள். ஒரு வெளிப்படையான நீதி விசாரணையை கேட்கிறார்கள். ஏனெனில் சர்வதேச நிறுவனங்களை இந்த அரசே வலுக்கட்டாயமாக வெளியேற்றியது. நீங்களும் எங்களை நடுத் தெருவில் விட்டுச் சென்றீர்கள். நாங்கள் அநாதைகளாக கொல்லப்பட்டோம். பாதுகாப்பு வலயத்துக்குள் செல்லுங்கள் என அரசு கூறியதை நம்பி அங்கு சென்ற மக்களை குண்டுகள், கொத்துக்குண்டுகள், பொஸ்பரஸ் குண்டுகளை வீசி படுகொலை செய்தீர்கள். எமது மக்கள் இன அழிப்பு செய்யப்பட்டார்கள். உலகப்பந்தில் 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில் உலகம் வெட்கித்தலைகுனியக்கூடிய வகையில் பாரிய இனப்படுகொலை இலங்கையின் வடக்கின் முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது. இதனை உலகம் ஏற்றுக்கொள்கின்றது. இவ்வாறான ஒருசூழலில்தான் இன்று ஐ.நா.சபை கூட மாறி விடுமோ என்ற அச்சம் எங்களுக்குண்டு

நாங்கள் ஒவ்வொரு தலைவர்களும் வருகின்றபோது தருகின்ற ஒவ்வொரு உறுதி மொழிகளையும் நம்புகின்றோம். ஏதாவது நடக்கும் என்று நினைக்கின்றோம். ஆனால் எதுவும் நடக்கவில்லை. இந்த நாடு ஜனநாயகத்தை மதிக்கும்நாடு என்று நீங்கள் கூறுகின்றீர்கள். இந்த நாடு நீதியான நாடு என்கிறீர்கள். அப்படியானால் இந்த நாட்டில் என்ன நடந்திருக்கின்றது? இழந்த உயிர்களுக்கு, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு தானா உங்கள் நீதி?

ஆப்கானிஸ்தானில் அந்த மக்கள் கதறி அழுகின்றபோது விமானம் விட்டு ஏற்றுகின்றார்கள். சர்வதேச ஊடகங்கள் அதனை வெளியே கொண்டு வருகின்றன. ஆனால், நாங்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்டபோது சர்வதேசம் மௌனம் காத்தது. எங்களுக்கு யாரும் விமானம் அனுப்பவில்லை. யாரும் கப்பல் அனுப்பவில்லை. நாங்கள் இலங்கை இராணுவத்தாலும் இலங்கை படைகளாலும் படுகொலை செய்யப்பட்டோம். அப்போது இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே அப்போதைய பாதுகாப்பு செயலராக இருந்தார். அவர்தான் இவ்வளவு விடயங்களுக்கும் தலைமை வகித்தார். ஆகவே, இன்றுள்ள சர்வதேச சமூகம் இதனை ஒரு நேரான வழியிலே சிந்திக்க வேண்டும். எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அது எங்கள் மக்களுக்கானதாக இருக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள்.

உள்ளக விசாரணை செய்கின்றோம் என்கிறீர்கள். இதற்கு தமிழர்கள் தயாராக வேண்டும் என்கிறீர்கள். சுட்டவர்கள் நீங்கள். பொஸ்பரஸ் குண்டுகளை வீசி கொலை செய்தவர்கள் நீங்கள். கொத்தணிக்குண்டுகளை வீசிக்கொன்றவர்கள் நீங்கள். 4 இலட்சம் மக்கள் இருக்கும்போது 70 ஆயிரம் பேரே இருப்பதாகக் கூறி உணவு அனுப்பியவர்கள் நீங்கள். பட்டினியால் கொல்லப்பட்டவர்கள் நாங்கள். குழந்தைகள் கஞ்சிக்காக வரிசையில் நிற்கின்றபோது கொன்றது நீங்கள். அனைத்துக் கொலைகளையும் செய்தது நீங்கள். நீங்களே இந்தக் கொலைகளை விசாரிப்பது என்றால் அது என்ன நியாயம்? கொலையாளியே தான் செய்த கொலைகளை விசாரிப்பது தான் இந்த உலகின் நீதியா? இந்த நீதியை நம் கேட்கவில்லை.

நாங்கள் கேட்பது ஒரு சுயாதீனமான, நியாயமான பாதிக்கப்பட்ட மக்கள் நம்பக்கூடிய இங்கு நடந்த படுகொலைகளை நிரூபிக்கக்கூடிய நேர்த்தியானதொரு விசாரணையே. அந்த விசாரணை ஒரு சர்வதேச விசாரணையாக இருக்க வேண்டும். யார் இந்தப் போரில் அழிக்கப்பட்டார்களோ அந்த மக்களுக்கு ஒரு நீதி கிடைக்கவேண்டும். அதனால் நீங்கள் விசாரிப்பது அல்ல விசாரணை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐ.நா. பொதுச் செயலாளருக்குக் கூறிய உள்ளக விசாரணை ஒரு நீதியான விசாரணை அல்ல - என்றார்.

## மன்னாரில் 104...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சென்று 4 மூடைகளில் பொதி செய்யப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த கேரள கஞ்சா பொதிகளை மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட கஞ்சா பொதி 104 கிலோ 750 கிராம் எடை கொண்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. மீட்கப்பட்ட கஞ்சா பொதிகள் இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன.


இலுப்பைக்கடவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தடத்தில் சிக்கிய சிறுத்தை வில்பத்து காட்டில் விடுவிப்பு

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு, முறிகண்டி காட்டுப்பகுதியில் மிருகங்களுக்கு வைக்கப்பட்ட தடத்தில் சிறுத்தை ஒன்று அகப்பட்ட நிலையில் வன ஜீவராசிகள் திணைக்களத்தால் உயிரோடு மீட்கப்பட்டது.

கிளிநொச்சி வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு வழங்கிய அவசர தகவலின் பிரகாரம் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் சிறுத்தை மீட்கப்பட்டு அடர்ந்த வனப்பகுதியான வில்பத்து சரணாலயப் பகுதிக்குப் பத்திரமாக எடுத்துச் செல்லப்பட்டு நேற்றிரவு விடுவிக்கப்பட்டது.



ஆறு அடி நீளமான பெண் சிறுத்தையே இவ்வாறு வில்பத்து சரணாலயப் பகுதியில் விடுவிக்கப்பட்டது என வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இறுதி யுத்தத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பிரதேசங்களில் பாரிய வீழ்ச்சியை சந்தித்தது. 2015ஆம் ஆண்டு பொதுத்தேர்தலிலும் கூட்டமைப்பின் வாக்குவங்கி சரிவடைந்தது.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சர்வதேசத்திலுள்ள விடுதலைப் புலி களின் அமைப்புகளுக்கும் இங்கு ஏதாவது ஒரு விடயத்தை விற்பனை செய்யாவிட்டால் அவர்களால் தொடர்ந்தும் இயங்கமுடியாது. கூட்டமைப்பினரின் பலரது பிள்ளைகள் இன்று மேற்குலக நாடுகளில் உள்ளனர்.

அவர்களை அங்கு கவனிக்க வேண்டுமென்றால் இங்கு இதுபோன்ற பிரச்சினைகளை விற்பனை செய்ய வேண்டும். அதேபோல் வெளிநாடுகளில் அகதி அந்தஸ்து கோரிச் சென்றுள்ளவர்கள் இங்கு பிரச்சினை இல்லை என்றால் திருப்பியனுப்பப்படுவார்கள்.

ஆனாலும் அங்கு அவர்களின் பிள்ளைகள் அங்குள்ள பல்கலைக்கழகங்களில் கற்றுவருவதால் மீள நாட்டுக்கு செல்வதை விரும்பமாட்டார்கள். போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைய முயற்சித்தவர்களை விடுதலைப் புலிகளே சுட்டுக் கொன்றார்கள். கிராமம் கிராமங்களுக்குச் சென்று மக்களை பணயக் கைதிகளாக் கினர்.

அவ்வாறு பணயக் கைதிகளாக வைக்கப்பட்டவர்களே இறுதியில் இயக்கத் தால் கொலை செய்யப்பட்டார்கள். அதற்கான முழுப்பொறுப்பையும் அவர்களே ஏற்க வேண்டும்.

வடக்கிலுள்ள மக்கள், காணாமல் போனோருக்கு என்ன நடந்தது என்பதை அறிவார்கள். போர்க்குற்றம் என்ன என்பதையும் அறிவார்கள்.

எனினும், அந்த மக்களைப் பட்டியல் படுத்தி வந்து போராட்டம் செய்யும்படியும், நட்டஈட்டை வழங்கித் தருவதாகவும் கூறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்தான் அவர்களைப் போராட்டத்தில் அமர்த்தியுள்ளனர்.

இந்தப் போராட்டம் நிதியுடன் தொடர்புடையதாக உள்ளது. தொடர்ந்தும் அதனை அவர்கள் செய்வார்கள். எனவேதான் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளரால் முன்வைக்கப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுக்களையும் எமது நாடு நிராகரித்தது. மிச்செல் பச்லெட் அம்மையார் அமெரிக்காவின் கைப்பாவை.

அமெரிக்க உதவியுடன்தான் அவர் அந்த அரியாசனத்தில் இருக்கின்றார். சிலி நாட்டின் அதிகாரத்தை அமெரிக்காவின் உதவியைப் பெற்று எப்படி வீழ்த்தி ஆட்சிக்கு வந்தாரோ அதே தோரணையில் இன்று எமது நாட்டின் மீதும் பல அழுத்தங் களை அவர் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளார் - என்றார்.

## வீட்டுக் கதவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

செய்திக் குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

அமெரிக்க நியூயோர்க் நகரில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத் தொடரில் கலந்து கொண்டிருக்கும் இலங்கை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ சில வேடிக்கையான கருத்துக்களை நகைச்சுவையாகக் கூறியிருக்கிறார்.

புலம்பெயர் தமிழ் சமூகம் இலங்கையில் முதலீடு செய்ய வேண்டும் என்று தான் வரவேற்கிறார் எனக் கூறியிருப்பது வீட்டு கதவை இறுக்கி பூட்டி வைத்துவிட்டு விருந்தாளிகளை உணவருந்த உள்ளிருந்து அழைப்பது போன்ற ஒரு செயல்பாடுதான் இது. புலம்பெயர் அமைப்புகள் பலவற்றை தடை செய்தமையோடு வெளிநாடுகளில் இருந்து வரக்கூடிய உறவுகள் அச்சம் அடையக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டு, இங்கு வந்து முதலீடு செய்யலாம் என்று ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் தெரிவித்திருப்பது வேடிக்கையாக இருக்கிறது.

முதலாவதாக முதலீட்டாளர்கள் ஒரு நாட்டை நோக்கி வருவதற்கான அரசியல் மற்றும் நிர்வாகச் சூழல் மிக அவசியம் என்பதை ஜனாதிபதி உணர்ந்து கொள்ள தவறி இருக்கிறார். முதலீட்டாளர்கள் வழமையாக இவற்றையே முதலில் பிரதானமாக கருத்தில் எடுத்து முதலீடுகளை தீர்மானிப்பார்கள்.

அரச நிர்வாகத்தில் இராணுவமயமாக்கல் தொடர்கிறது.

அரசியல் பிரச்சனைகள் , மனித உரிமை விடயங்கள் அரசால் தீர்வு காணப்படாமல் தொடர்கின்றன. உள்ளகப் பொறிமுறை ஊடாக நியாமான தீர்வு எந்த இனத்தவருக்கும் கிட்டாது என முழு நாடுமே உணர்ந்துள்ளது.

எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தால் போல அரசியல் கைதிகள் சிறைச்சாலைக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சரால் துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டுள்ளனர். அதற்கான சட்ட நடவடிக்கை எடுக்க, நீதி வழங்க உள்ளக பொறிமுறை தவறியுள்ளது மாத்திரமல்ல, அவற்றிற்கு அரசு துணை போவதையும் எடுத்து காட்டியுள்ளது.

இந்த நிலையில் இலங்கை ஜனாதிபதி ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் வேடிக்கையானவை.

அரசு இனியும் அரசியல் தீர்வு, மனித உரிமை, நீதிப் பொறிமுறை, நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் என்பவற்றை நிலைநாட்ட சர்வதேச சமூகத்தோடு ஒத்திசைந்து இதயசுத்தியோடு செயல்பட தவறினால் ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் அதல பாதாளத்துக்குள் தள்ளுவதாகவே அது முடியும். - என்று உள்ளது.

## மேலும் சரிந்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

எண்ணிக்கை 12 ஆயிரத்து 284 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்தவர்களில் 36 பெண்களும் 30 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் என இருவர் 30 வயதுக்கு உட்பட்டவர்கள். 06 ஆண்கள், 05 பெண்கள் என 11 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 53 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 23 ஆண்களும், 30 பெண்களும் அடங்குகின்றனர்.

## கிராமத்துக்கு 30 இலட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அழைக் கப்படவில்லை எனத் தற்போது தெரிவிக்கப்படுகின்றது.

இதன் மூலம் வடக்கைப் புறக்கணித்து ஏனைய 8 மாகாணங்களில் மட்டும் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இது தொடர்பில் வடக்கில் மக்களின் வாக்கைப் பெற்று நாடாளுமன்றத்தில் அரச தரப்பில் அங்கம் வகிக்கும் ஓர் அமைச்சர் உள்ளிட்ட நால்வரும் இதுவரை மௌனம் காக்கின்றனர் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## நேற்று 1, 351...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மேலும் 1,047 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 34 ஆயிரத்து 140 உயர்வடைந்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கில் தபால் அலுவலகங்கள் இன்மை; மக்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும உத்தரவாதம்



கிளிநொச்சி மாவட்டம் அடங்கலாக வடக்கு மாகாணத்தில் நிலவும் தபால் மற்றும் உபதபால் அலுவலகங்கள் இல்லாமையால் பொது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று வெகுஜன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நேற்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்றத்தில் முன்வைத்த வாய் மூலமான கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக வடக்கு மாகாண அரசியல் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தி தீர்வு காணப்படும் என அவர் இதன்போது குறிப்பிட்டார்.

நாடுமுழுவதும் தபால் மற்றும் உப தபாலகங்களை அமைக்கும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் எதிர்வரும் வருடங்களிலும் கட்டட நிர்மாணங்கள் இடம்பெறாத போதிலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பமாகும்போதும் இந்த மாகாணத்துக்கு முக்கியத்துவம் வழங்கப்படும் என்றும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்தார்.

## மீண்டும் எம்.பியானார் ஜயந்த கெட்டகொட

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக ஜயந்த கெட்டகொட நேற்று (செவ்வாய்க்கிழமை) பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் அவர் இவ்வாறு பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள அஜித் நிவார்ட் கப்ரால் இராஜினாமா செய்தமையை அடுத்து வெற்றிடமாக உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காக ஜயந்த கெட்டகொடவை நியமிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முடிவு செய்திருந்தது.

ஜயந்த கெட்டகொட, 2000ஆம் ஆண்டில் முதன்முறையாக கொழும்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியதுடன், பின்னர் அந்த நாடாளுமன்றத்தை கலைத்த பின்னர் 2001 இல் மீண்டும் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதனை அடுத்து 2011 ஆம் ஆண்டில் அவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கிடைத்ததுடன், 2020 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினராக நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டார்.

இதனை அடுத்து கடந்த மாதம் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தேசியப்பட்டியில் ஊடாக நாடாளுமன்றத்துக்கு நுழைவதற்கு வழி வகுக்கும் வகையில் ஜயந்த கெட்டகொட தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தடுப்பூசி செலுத்தல் மட்டுப்படுத்தப்படலாம் தாமதமின்றி உடனடியாகச் செலுத்துங்கள்!

### ஹேமந்த ஹேரத் அறிவிப்பு



எதிர்காலத்தில் தடுப்பூசி செலுத்தும் திட்டம் மட்டுப்படுத்தப்படலாம் என்பதால், தாமதமின்றி தடுப்பூசியை செலுத்திக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

தற்போது மேற்கொள்ளப்படும் நடமாடும் தடுப்பூசித் திட்டம் எதிர்காலத்தில் கிடைக்காமல் போகலாம் என பொது சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் கூறினார்.

அதற்கு பதிலாக, தடுப்பூசி நடவடிக்கை குறைந்த எண்ணிக்கையிலான நிலையங்களில் நடத்தப்படும் என்றும் மேலும் இந்த செயன்முறை எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதை உறுதியாக கூறமுடியாது என்றும் அவர் தெரிவித்தார். மேலும் ஒரு வருடத்துக்குள் முழுமையாக தடுப்பூசி போடப்பட்டவர்களுக்கு மூன்றாவது (பூஸ்டர்) தடுப்பூசியை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஏற்கனவே விவாதம் இடம்பெற்று வருவதாக ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

குறித்த மூன்றாவது தடுப்பூசியை வழங்கும் செயற்பாட்டை ஆரம்பித்தால் முதல் மற்றும் இரண்டாவது தடுப்பூசியை வழங்குவதற்கான நேரம் இருக்காது என்பதால் இவற்றைக் கருத்திற்கொண்டு விரைவில் தடுப்பூசி செலுத்துமாறு அவர் கேட்டுக்கொண்டார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.09.2021 இல் வெளியிடப்பெற்றது.